பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 10 வெள்ளிக்கிழமை 24.01.2020 கதிர் 80

### இனி இது ரகசியம் அல்ல!

'சோழியன் குடுமி சும்மா ஆடாது. என்பார்கள். ராஜபக்ஷ அரசின் நகர்வுகள் கூட அத்த கையவைதான்.

பௌத்த, சிங்கள வாக்குகளை மட்டும் வைத்து ஜனாதிபதித் தேர்தலில் பெருவெற்றியீட்டிய ராஜ பக்ஷக்கள், அதே பக்கம் 02 »

# மாவையையும், சம்பந்தனையும் ஓரம்கட்டி விட்டு தான் தலைவராவதற்குத் துடிக்கிறார் சுமந்திரன்!



## விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 24

மாவையையும் சம்பந்தனையும் இன்னும் பலரையும் ஓரங்கட்டி தலைமைத்துவத்தைத் தானே பெறக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் முயல்கின்றார். கூட்டமைப்பின் அடுத்த தலைவர் தானே என்ற முறையில் அவர் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

– இவ்வாறு முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தம்பி தொடக்கிவிட்ட கூட்டு, தவறான தலைவர்களின் கைகளுக்கு மாறிவிட்டால் என்ன நடக்கும்? கொள்கைகள் பறிபோவன. சுயநலம் தலைவிரித்தாடும். – என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்கம் 03 »

# கொழும்பில் களமிறங்க தயாராகின்றது தமிழரசு

## சம்பந்தன், மாவை, சுமந்திரனுடன் மாவட்டக் கிளை நேற்று ஆராய்வு

### பம்பலப்பிட்டியில் 3 மணி நேரம் கலந்துரையாடல்



கொழும்பு, ஜனவரி 24

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்குக்கு வெளியே கொழும்புத் தேர்தல் மாவட்டம் உட்பட்ட மேல்மாகாணத்திலும் களமிறங்குவது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பில் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் கூட்டத்தை மாவட்டக்கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா நேற்று மாலை பம்பலப்பிட்டியில் கூட்டினார். அக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்புப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார்.

பக்கம் 03 »

## நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய விரைவில் கைதாகும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 24

முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவை நீதிமன்றில் பெற்றுக்கொள்ளுமாறு பக்கம் 03 »

## ஷானி அபேசேகர நேற்று 6 மணிநேரம் வாக்குமூலம்

கொழும்பு, ஜன. 24

குற்றப்புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர குற்றப்புலனாய்வுப் பிரிவில் 6 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் பக்கம் 03 »

## பாதுகாப்பு அமைச்சு கோட்டாபயவிடம்!

கொழும்பு, ஜன. 24

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன பக்கம் 03 »

## கோட்டாபயவின் கருத்தை நிராகரித்தனர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்!



முல்லைத்தீவு, ஜன. 24

காணாமல் ஆக்கப்பட்ட எந்த உறவுகளும் தன்னிடம் இல்லை என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதளை வழங்குவதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத் பக்கம் 02 »

## தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை கூட்டமைப்பினரே சீர்குலைத்தனர்

### சாடுகின்றார் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழக் கட்சிகளின் ஒன்றுமையை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சீர்குலைத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே எனத் தெரிவித்துள்ள பக்கம் 03 »

## மைத்திரியை கைது செய்து சிறைக்குள்ளே தள்ளுங்கள்!

### பாலித ரங்கே பண்டார கோரிக்கை

கொழும்பு, ஜன. 24

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்து சிறையில் அடைக்கவேண்டுமென பக்கம் 02 »

## வடக்கு மாகாண சபைக்கான நிதிகள் செலவழிக்கப்படாது திரும்பவில்லை

### அமைச்சரின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் சி.வீ.கே.

யாழ்ப்பாணம், ஜன. 24

வடக்கு மாகாண சபைக்கான நிதி செலவழிக்கப்படாமல் திரும்பிச் சென்றது எனக் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த கூறிய பக்கம் 02 »

## தென்பகுதியைச் சேர்ந்த மீனவர் கொக்கிளாயில் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய் வில்லுக்குளம் பகுதியில் நேற்று ஆணொருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது .

தென்பகுதியிலிருந்து பக்கம் 03 »

காலைக்கதிர்



# படைச் சிப்பாயைத் தாக்கியவரின் சகோதரன் வல்வையில் கைதானார்

யாழ்ப்பாணம், ஜன. 24

இராணுவச் சிப்பாயைத் தாக்கியவரும் அவரது சகோதரனும் தலைமறைவாகியிருந்த நிலையில் சகோதரன் வீடொன்றில் மறைந்திருந்த சூழலில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள யாரும் வசிக்காத வீடொன்றில் சந்தேகநபர், நண்பர்களுடன் இருந்தவேளை அந்த வீட்டை நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினர் சுற்றிவளைத்து அவரைக் கைது செய்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதி கடந்த 15ஆம் திகதி தைப்பொங்கல் நாளன்று இராணுவச்சிப்பாய் ஒருவர் பொதுமகனால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் முன்னாள் போராளி என்று தெரிவித்த இராணுவத்தினர், மறுநாள் 16ஆம் திகதி நாகர்கோவில் பகுதி அதிகாலை 3 மணி தொடக்கம் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுத்தனர்.

வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமி ஒருவரை மோதி விபத்தை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி வந்தார் என இராணுவத்தினர் அந்த நபரைக் கண்டித்தனர்.

அதன்போது அந்த நபரின் உறவினர்கள் கூடியமையால் துணிவடைந்த அவர் இராணுவச் சிப்பாயைத் தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இராணுவச் சிப்பாயும் அந்த நபரைத் தாக்கியிருந்தார்.

சிப்பாயைத் தாக்கிவிட்டு அனைவரும் அந்த இடத்திலிருந்து தப்பித்தனர். நாகர்கோவில் பகுதி மறுநாள் அதிகாலை 3 மணி தொடக்கம் சுற்றிவளைக்கப்பட்டது.

நாகர்கோவில் பகுதியிலிருந்து எவரும் வெளியில் செல்லவோ, வெளியிலிருந்து எவரும் உள்ளே செல்லவோ அனுமதிக்கப்படவில்லை. இந்தச் சுற்றிவளைப்பு அன்றிரவே விலக்கப்பட்டது. சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

எனினும் இராணுவச் சிப்பாயைத் தாக்கியவரும் அவரது சகோதரனும் கைது செய்யப்படாதமையால் இராணுவத்தினரின் தொடர் தேடுதல் நடவடிக்கை கடந்த ஒரு வாரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே இராணுவத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள யாரும் வசிக்காத வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

அங்கு இராணுவச் சிப்பாயைத் தாக்கியவரது சகோதரன் நண்பர்களுடன் இருந்தவேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அவர் பின்னர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இராணுவச் சிப்பாயைத் தாக்கியவர் எனத் தெரிவிக்கப்படும் முன்னாள் போராளி தலைமறைவாகி உள்ள நிலையில் இராணுவத்தினர் தொடர்தேடுதலை முன்னெடுத்துள்ளன. (ஐ)

## மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரோ அல்லது பொலிஸ்மா அதிபரோ அந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டியதில்லை. பெஜட் வீதி அரச மாளிகையில் சொகுசாக வாழ்ந்து வரும் முன்னாள் ஜனாதிபதியே இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். சிறிசேனவுக்கு இப்போது ஜனாதிபதிக்கான சிறப்புரிமை இல்லை. எனவே அவரைக் கைது செய்யலாம் . உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பற்றி தெரிந்துகொண்ட பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று ஒளிந்து கொண்டார் மைத்திரிபால. அவர் செய்த உயிர்வேள்வியே அந்தத் தாக்குதல்களாகும். – என்றார். (ஐ)

## கோட்டாபயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தாம் முற்றாக நிராகரிக்கிறார்கள் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1052 ஆவது நாளாக தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அறிக்கையில் காணாமல் ஆக்கப்பட்ட எந்த உறவுகளும் தன்னிடம் இல்லை என்பதையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவார் எனவும் தெரிவித்துள்ளார்.

இவரின் இந்தக் கருத்துக்கு மறுப்பு அறிக்கையை நாங்கள் விடுகின்றோம். கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலகட்டத்தில்தான் எமது உறவுகள் படையினரிடம் கையளிக்கப்பட்டனர்; காணாமல் ஆக்கப்பட்டனர். மே 18 ஆம் திகதி போர் வெற்றிவிழா கொண்டாடித்தான் எங்கள் உறவுகளை அவர்கள் பொறுப்பேற்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் விடுதலைப் புலிகளைச் சாட்டுவதை முழுமையாகக் கண்டிக்கின்றோம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறித்தான் எங்கள் பிள்ளைகளைப் படையினரிடம் ஒப்படைத்தோம். அன்று அங்கு இருந்தவர்கள் இன்று அரச தரப்பாகவும் இருக்கின்றார்கள். அவர்களே இன்று முற்றிலும் மாறான கருத்தினை வெளியிட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரலாறும் உள்ளது .

வெள்ளைக்கொடியுடன் வாருங்கள், உங்கள் பிள்ளைகளை ஒப்படையுங்கள், நாங்கள் விடுவிப்போம் என்று கூறிய – படை அதிகாரிகளாக இருந்தவர்கள்தான் இன்றும் படைத் தளபதிகளாக இருக்கின்றார்கள்.

ஜனாதிபதியின் மரணச் சான்றிதழுக்காகவா பத்து ஆண்டுகள் காத்திருந்தோம்? படையினரிடம் கையளித்த உறவுகளுக்கான நீதி வேண்டும். தான் போர்க் குற்றத்தில் இருந்து தப்புவதற்காக எங்களைக் குற்றவாளிகளாக்குவதா? நாங்கள் மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை.

எங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இந்த அரசுதான் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி இந்தத் தேடலை மேற்கொண்டிருக்கின்றோம். எங்களுக்கான நீதி இலங்கையில் கிடைக்காது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளை நிறுத்தி எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, எப்போது விடுதலை என்பதை அறிந்து சொல்ல வேண்டும். அது மட்டும் நாங்கள் போராட்டத்தைக் கைவிடமாட்டோம்–என்றார். (ஐ)

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தை மறுத்துள்ள வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முதலில் நிதி அமைச்சில் தரவுகளைப் பார்த்த பின்னர் அது குறித்து அமைச்சர் தகவல் வெளியிட வேண்டும் எனவும், திட்டமிட்ட வகையில் கூட்டமைப்பின் மீது குற்றஞ்சாட்டுவதைக் கண்டிக்கிறார் எனவும் தெரிவித்தார்.

கைதடியில் உள்ள வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தாததன் காரணமாக அது திரும்பி சென்றுள்ளதாக அமைச்சர் நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார். நான் நினைக்கின்றேன், அமைச்சர் நிதி அமைச்சில் உள்ள தரவுகள் தெரியாமல் கூட்டமைப்பின் மீது திட்டமிட்ட வகையில் சேறு பூசவேண்டும் என்ற நோக்கில் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஏனெனில் வடக்கு மாகாண சபையின் ஆயுட்கலாம் நிறைவடைந்து நீண்ட காலம் முடிந்த பின்னர் இப்போது வந்து இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையை ஆட்சி செய்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதால் தற்போது விசமத்தனமான குற்றச்சாட்டைக் கூறுகின்றார். மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது சபை உறுப்பினர்கள் சிலரும் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர். அவர்களுக்குத் தரவுகள் தெரியாமல் அதனை முன்வைத்திருக்கலாம். அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டபோதே நான் உரிய தரவுகளுடன் உறுப்பினர்களுக்கும் வடக்கு மாகாண மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

இப்போது அதே குற்றச்சாட்டை மஹிந்த தரப்பு அமைச்சர் முன்வைத்துள்ளார். இது தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் எடுத்தவற்றுக்கு எல்லாம் மாகாண சபை நிதி திரும்பிச் சென்றது எனச் சொல்கின்ற போக்கு காணப்படுகின்றது. அவ்வாறான குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் முதலில் நிதி அமைச்சின் தரவுகளைப் பார்த்துவிட்டுப் பேசவேண்டும்.

மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது நாம் கோரிய நிதி கிடைக்கவில்லை. நாம் கேட்டதில் மூன்றில் ஒரு பங்கைக் கூடத் தரவில்லை. அவ்வாறான நிலையில் தேர்தல் அரசியலுக்காக விசமத்தனமான குற்றச்சாட்டுகளை முன்வைக்கக் கூடாது–என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப் பெறும்பகல்கனவுடன் உள்ளனர்.

அதன் காரணமாக சிறுபான்மை இனங்கள் விடயத்தில் தயவு தாட்சண்யம் காட்டாமல், கடும் கறாரான நிலைப்பாட்டைப் பிரதிபலித்து வருகின்றனர். சிறுபான்மையினருக்கு ஏதேனும் சகாயம் செய்பவர்கள் போலக் காட்டி, அதன் மூலம் தெற்கில் பௌத்த, சிங்கள வாக்குகளை இழந்து விட ராஜபக்ஷக்கள் தயாரில்லை. அதனால் சிறுபான்மை இனங்களில் இருந்து சற்று எட்டி நிற்பவர்களாகவே அவர்கள் காட்டிகொள்கின்றனர்.

காலங்காலமாக நடந்து வந்த தேசியத் தைப்பொங்கலை ரத்துச் செய்தமை கூட இந்த வகையில்தான். தைப்பொங்கல் பானைக்கு முன்னால் பொங்கலுக்கு அரிசி போடும் தனது படம் வெளியாகி, தமிழர் திருநாளைத்தானும் சேர்ந்துகொண்டாடினார் என்ற 'அவப்பெயர்' தென்னிலங்கை பௌத்த, சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு வந்து விடக் கூடாது என்பதில் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அவ்வளவு கவனம்.

*"தமிழருக்கு இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை. ஆகையினால் இனப்பிரச்சினைத்தீர்வு என்ற கோதாவில் தமிழர்களின் தலைவர்களோடு எந்தப் பேச்சும் நடத்த வேண்டிய தேவையே இல்லை. தமிழருக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினைதான். அதைத் தீர்த்தால் போதுமானது."* – என்ற சாரப்படத்தான் புதிதாகப் பதவியேற்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அண்மைக் காலமாகத் தமது கருத்து நிலைப்பாட்டைப் பிரதிபலித்து வந்தார்.

இந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவடையும் வரை சிறுபான்மையினருக்கு எதிரான ஒரு கடும் போக்கைத்தான் அவர் தொடர்ந்து பிரதிபலித்து நிற்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசிய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுநடத்துவதற்காக சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களுக்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கின்றார் என்று திடீர்க் குண்டைத் தூக்கிப் போட்டார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தமிழத்தரப்புடன் திடீர்ப்பேச்சு ஆசை கோட்டாவுக்கு ஏன் ஏற்பட்டது? அது பற்றிய அழைப்பை வெளிவிவகார அமைச்சர் ஏன் விடுக்கவேண்டும்? எனக்கு விளங்கவில்லை. தேடித் துருவினேன்.

அப்போதுதான் சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது புரியத் தொடங்கியது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதல் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அது பெரும்பாலும் அடுத்த மாதம் 24, 25ஆம் திகதிகளிலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு இரண்டு நாள் விஜயமாக வரும் அமெரிக்க ஜனாதிபதியை இந்தியாவுக்குச் செல்லும் வழியில் அல்லது திரும்பிப் போகும் வழியில் கொழும்புக்கு ஒரு சில மணி நேர விஜயத்தையாவது மேற்கொள்கை செய்யும் முயற்சியில் கோட்டா அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றதாம்.

அமெரிக்க ஜனாதிபதி இலங்கைக்கு வருவதும், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவருக்கு சரிசமமாக நின்று கொழும்பில் அவரை வரவேற்றுப் பேச்சு நடத்துவதும் தமக்கும், தமது அரசுக்கும் பெரும் 'பூஸ்ட்' ஆக இருக்கும் என்று கருதுகின்றாராம் கோட்டா. இந்தியா வரும் போது எப்படியும் ஓர் எட்டு எட்டி கொழும்பையும் தொட்டுச் செல்ல வைத்துவிட வேண்டும் என்ற கட்டளை வெளிவிவகார அமைச்சுக்குப் பறந்திருக்கின்றது. சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புக்களும், தெரிந்த தொடர்புகள் மூலம் அமெரிக்கப் பக்கத்துக்கு முழு அழுத்தம் கொடுத்து, செல்வாக்குப் பிரயோகிக்குமாறு வேண்டப்பட்டிருப்பதாகவும் தகவல்.

அமெரிக்க அதிபர் டிரம்பின் கொழும்பு விஜயத்தின் மூலம் சர்வதேச சமூகத்தில் சரிந்திருக்கும் தனது செல்வாக்கையும் பெயரையும் தூக்கி நிறுத்துதல், இந்திய, சீன இழுபறிக்கு மத்தியிலிருந்து சற்று விலகுதல் போன்ற பல சௌகரியங்கள் உள்ளன என்று கொழும்பு அரசு கருதுகின்றதாம்.

ஆனால், அமெரிக்க அதிபர் டிரம்ப்பை அழைப்பதில் ஒரு சிக்கல் இருக்கின்றது. ஆள் ஒரு முசுடுப் பேர்வழி. தாரதம்மியம் பார்க்காமல் மனதில் பட்டவற்றை கவிழ்த்துக் கொட்டி விட்டுப் போகக் கூடியவர்.

ஏற்கனவே ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் விடயத்தில் கோட்டா அரசின் நிலைப்பாடு காரணமாக டிரம்ப் நிர்வாகம் இலங்கை தொடர்பில் சற்றுக் கடுப்பில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சமயத்தில், டிரம்பை கொழும்புக்கு அழைத்து அவரைப் பகிரங்கமாகப் பேச அனுமதித்தாலோ அல்லது பத்திரிகையாளரைச் சந்திக்க அனுமதித்தாலோ அது விபரீத நிலையை ஏற்படுத்தி விடும். அது வானத்தில் பறந்த பூதத்தை ஏணி வைத்து இறக்கி விட்டுக்குள் விட்ட கதை போன்றதாகி விடும்.

அப்படி ஏற்படாமல் இருப்பதைத் தவிர்க்கவே தமிழர் தரப்புக்கு அழைப்பு விடுவதான அறிவிப்பு. டிரம்ப் கொழும்பு வருவார் எனின் அதற்கு முதல் தமிழர் தரப்புடனான பேச்சை கோட்டா அரசு ஆரம்பித்து விடும். டிரம்ப் வரும் போது 'இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சை நாங்கள் ஆரம்பித்து விட்டோம், தீர்வு காண வேண்டியதுதான் பாக்கி' – என்று அவருக்குக் கதை விட்டு, காரணம் சொல்ல ஏற்பாடுகள் பூர்த்தியாகி இருக்கும்.

இதுதான் அரசுத்தரப்பு குடுமி ஆடியதற்குக் காரணம். அது சும்மா ஆட வில்லை.

டிரம்ப் கொழும்பு வராவிட்டாலும் பக்கத்து நாடு இந்தியாவில் அவர் பத்திரிகையாளர்களைச் சந்திக்கும்போது அங்குள்ள ஊடகவியலாளன் ஒருவன் பக்கத்துநாட்டு நிலைமை குறித்து ஒரு கேள்வி கேட்காமலா இருப்பான்?

எப்படிப் பார்த்தாலும் கோட்டா அரசுக்கு டிரம்பின் இந்திய விஜயம் நெருடல் தருவதாகத்தான் இருக்கும்.

அவற்றைச் சமாளிப்பதற்கு சோழியன் குடுமி நேரத்துடனேயே ஆடுகிறது...!

நிச்சயம், அதை அவதானிப்பதற்கு சுவாரஸியமாகத்தான் இருக்கும்...!

–மின்னல்–

## மாவையையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த வாரத்துக்கொரு கேள்வி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தமிழ் மக்கள் கூட்டணியின் அங்கத்தவர் ஒருவர் என்னுடன் கலந்துரையாடியவற்றை இவ் வாரத்துக்கொரு கேள்வியாகத் தருகின்றேன்.

கேள்வி:– சேர்! நாங்கள் உங்களைச் சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் மாவைக்கும் ஒரு மாற்றுத்தலைவராக நினைத்திருக்கும் போது, நீங்கள் எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றப்பட்டால் அக்கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் பயணிப்பதை பரிசீலிக்க முடியும் என்று கூறலாம்? போதாக்குறைக்கு செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் இதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியுள்ளார்கள். எங்களை எல்லாம் விட்டுச் செல்ல துணிந்து விட்டீர்களா?

பதில்:– இல்லை. நான் உங்களுடனேதான் இருப்பேன். நீங்கள் என்னுடனேதான் இருப்பீர்கள். பல விடயங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்றவர்கள் தமது தலைமைத்துவத்தை விட்டுக் கொடுக்க முன்வருவார்களா? அதை முதலில் சிந்தியுங்கள்.

கூட்டமைப்பின் அடுத்த தலைவர் தானே என்ற முறையில் சுமந்திரன் காய்களை உருட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? அவர் தமது கனவுகளைச் சிதைக்க ஒத்துக்கொள்வாரா? எஸ்.ஜே.வி.க்கும் அவருக்கும் இடையில் குணஅளவில் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேற்றுமை இருப்பினும் அடுத்த எஸ்.ஜே.செல்வநாயகம் தானே என்று முழுமையாக நம்புகின்ற அவர் எவ்வாறு தலைமைத்துவத்தை விட்டுக் கொடுப்பார்?

அவர் மாவையையும் சம்பந்தனையும் இன்னும் பலரையும் ஓரங்கட்டி தலைமைத்துவத்தைத் தானே பெற முயல்கின்றார் என்பதை அறியமாட்டீர்களா?

'எங்கள் கட்சியையே தேசியத்தலைவர் அடையாளம் காட்டினார்; நாங்களே உண்மையான வாரிசுகள்'' என்று தேர்தலின் போது ஆனல்டும், சயந்தனும் சுமந்திரனுடன் சேர்ந்து மார்தட்டப் போவதை உங்களால் யூகிக்க முடியாதிருக்கின்றதா?

சென்றமுறை நடந்த தேர்தலில் நேர்ந்த அதே தவறுகள் மேலும் இன்னும் பெரிய விதத்தில் இம்முறை நடைபெறாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ரணில் இல்லாவிட்டால் சிலரால் இயங்க முடியாது என்று எண்ணுகின்றீர்களா?

தம்பி தொடக்கிவிட்ட கூட்டு, தவறான தலைவர்களின் கைகளுக்கு மாறிவிட்டால் என்ன நடக்கும்? கொள்கைகள் பறிபோவன. சுயநலம் தலைவிரித்தாடும்.

மக்கள் தம்பியின் பெயரைக் கேட்டு மயங்கி தம்பி தொடக்கிய பழைய கட்சியான த.தே.கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள். பதவிக்கு வந்ததும் இவ்வாறானவர்கள் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டு பொருளாதார விருத்தி பற்றிப் பேசுவார்கள்.

இதுவரை எமது 15 நாடாளுமன்ற அங்கத்தவர்கள் மக்கள் பிரச்சினைகளை மறந்தது போல் தமிழ் மக்களின் எதிர்காலத்தை கஞ்சிப் பானைக்கு காலப்போக்கில் விற்று விடுவார்கள். பொது மன்னிப்பு எமது சிறைக் கைதிகளுக்கு அளிக்காவிட்டால் ரணிலுடன் சேர்ந்து பயணிக்க மாட்டோம் என்று ஒருமுறை கூறியிருந்தால் அவர்கள் விடுதலை அடைந்திருப்பார்கள்.

எமது மக்கள் (முக்கியமாக என் வயதினர் அல்லது வயதில் மூத்தவர்கள்) த.தே.கூட்டமைப்புடன் ஒரு உணர்வுபூர்வமான உறவை இது காறும் வைத்திருந்து வந்துள்ளார்கள். அந்தப் பலவீனத்தைப் பாவிப்பார்கள் எமது விண்ணாதி விண்ணர்கள்! மக்கள் சார்பான கொள்கைகளை மலையேற்றி விட்டு மத்தியின் மதியூகிகளாக மாறி விடுவார்கள் எமது புதிய தலைவர்கள்.

பாருங்கள்! ஆலைகளைத் தந்தோம், பாதைகளைத் தந்தோம், பல் தொழில்கள செழிக்கச் செய்தோம்! வேறு என்ன வேண்டியிருக்கின்றது? என்று டக்ளஸ் பாணியில் பல்லவி பாடத் தொடங்கி விடுவார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் வட கிழக்கை இணைக்க முடியாது: சமஷ்டி கிடையாது: எமது தேசியம் வெறும் கூக்குரலேயன்றி இறைமையை வேண்டுவது முட்டாள்த்தனம். ஒற்றையாட்சிக்குள் கிடைப்பதை சுருட்டிக் கொள்வோம். நாம் பதவியில் இருக்கும் அரசுடன் சேர்ந்து எமது தனிப்பட்ட நலன்களையும் பெற்று பொருளாதார சலுகைகளையும் பெற்றுக்கொடுப்போம் என்ற மனோநிலையிலேயே பயணஞ் செய்வார்கள்.

கொள்கைப் பற்றுறுதியுடன் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான் அதன் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள் இன்று இந்த கேவலமான நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

அதற்குத்தானே மாற்றுத் தலைமை வேண்டுகின்றோம் என்பது உங்கள் வாதம். ஆனால் நடக்கப்போவது என்ன? மக்கள் குழம்பிவிடப் போகின்றார்கள். பல்முனைப் போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கூடிய வாக்குகளைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம். பொருத்தமற்ற, தமிழ் இதயத்தைப் புரிந்து கொள்ளாத தலைவர்கள், சுயநலமே வாழ்க்கை என்ற கொள்கையுடைய தமிழ்த் தலைமைகளே தமிழர்களின் வருங்காலத்தைத் தீர்மானிப்பார்கள். எமது கோரிக்கைகள் அனைத்தும் கானல் நீராகிவிடும்.

மாற்றணிக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் நிலமை சீராகுமல்லவா என்று நீங்கள் கேட்பீர்கள். ஆனால் எல்லாக் கட்சிகளிலும் நாம் காண்பது என்ன? எவ்வகையிலேனும் தமது கட்சியைப் பலப்படுத்த வேண்டும், தாங்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வேண்டும், அதிகாரம் தமது கைகளுக்கு வர வேண்டும், நாடாளுமன்ற அங்கத்துவத்தின் நன்மைகளை ஐந்து வருடங்களுக்கேனும் சுகிக்க வேண்டும் என்றே எண்ணுகின்றார்கள்.

ஆணவத்தையும் சுயநலத்தையும்தான் எல்லாரிடத்திலும் காண்கின்றேன். மக்களைப் பற்றிய கரிசனையை நான் அவர்களிடம் காணவில்லை. ஒருவருக்கொருவர் தமது அறிவுக் கூர்மையைக் வெளிக்காட்டி மற்றவர்களுக்கு எதிராகப் புள்ளிகள் பெறவே முயல்கின்றார்கள். ஒருவருக்கொருவர் மற்றவர்களின் தனிப்பட்ட வாழ்வின் தவறுகளைச் சுட்டிக்காட்டி சந்தி சிரிக்க வைக்கின்றார்கள். இணையத்தில் சிலவற்றை ஓட விடுகின்றார்கள். ஒவ்வொருவரும் தான் நல்லொழுக்கத்தின் சிறந்த எடுத்துக்காட்டு என்றும் மற்றவர்கள் கேவலமானவர்கள் என்றும் உலகத்திற்கு எடுத்துக் காட்ட முயல்கின்றார்கள்.

அதுவும் சட்டத்தரணிகள் தமது புத்திக்கூர்மையொன்றே தமிழர்களுக்கு விடிவு காலத்தை தரும் என்று எண்ணுகின்றார்கள். சேர்.பொன்னம்பலம் இராமநாதன் தொடக்கம் இன்றுவரை தமிழர் தலைவர்கள் சட்டத்தரணிகளாகவே இருந்து வந்துள்ளனர். அவர்கள் மக்களை ஒன்று சேர்த்து ஒரு குடைக்கீழ் பிரயாணம் செய்யவிடுவார்களோ என்பது சந்தேகமே. அரசியல் பேச்சுக்களுக்கு எங்கள் மக்கள் எடுபடுகின்றார்கள்: அரசியல்வாதிகள் தரும் சம்திங்க்கு எடுபடுகின்றார்கள். வெகுவிரையில் இலங்கை முழுவதும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு வரவிருக்கும் கெடுதிகளை இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை.

இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடென்று உருமாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் எமது அரசியல்வாதிகள் நடமாடுவது எமக்கு வேதனையை அளிக்கின்றது. எம்முள் இருக்கும் முரண்பாடுகளை – ஒற்றுமையின்மையை – இதுவரை மத்திய அரசாங்கங்கள் தமக்குச் சார்பாக பயன்படுத்தி வந்துள்ளன.

உதாரணமாகப் பார்த்தால், இனப்பிரச்சினைக்கான பேச்சில் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தாமாகத் தனித்தே மத்திய அரசுடன் பேசுகின்றார்கள். மற்றவர்களைப் பங்கு கொள்ள விடுவதில்லை. சில நேரங்களில் மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறுவார்கள். இந்தத் தெரியாதவர்களை தேர்ந்தெடுப்பதும் இவர்கள் தான்.

தம்முடன் முரண்படாமல் செல்லக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டு அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று கூறுவது தம்மை அதிகாரத்தில் வைத்துக்கொள்ளவே. அதிகாரத்தைத் தம் கைகளுள் வைத்திருக்க வேண்டும் என்ற இவர்களின் பலவீனத்தை வைத்து மத்திய அரசு இவர்களை தம்வசப்படுத்துகின்றது.

எனவே இனப்பிரச்சினைக்கான பேச்சாக இருந்தாலும் சர்வதேச நடுநிலை இருக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

எது, எவ்வாறெனினும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தற்போதைய தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என்று நான் கூறினேனே ஒளிய அத்தலைமைத்துவத்தை எனக்குத் தாருங்கள் என்று எப்போதுமே கூறவில்லை.

மருத்துவ நிபுணர் பூ. லக்ஷ்மன் அல்லது மருத்துவ நிபுணர் சிவன் சுதன் போன்றவர்கள் தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டால் கட்டாயம் அவர்களுடன் கலந்தாலோசிக்க முடியும். அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் சேர்ந்து செல்ல முடியும். ஆனால், அவ்வாறானவர்கள் அரசியலுக்கு வரத் தயங்குகின்றார்கள்.

சிலர் நான் மாற்று அரச தலைமைக்காக அலைகின்றேன் என்கின்றார்கள். மாற்று அரசியல் தலைமை எனக்குக் கிடைத்து நான் என்ன செய்யப் போகின்றேன்? எனக்கு வேண்டுவது ஒன்றே ஒன்று மட்டுமே! எமது தமிழ் மக்களின் வருங்காலம். அவர்கள் மாண்புடனும், மதிப்புடனும் வாழ வேண்டும். அவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். அது மேம்பட வேண்டும். அதனை மனதில் வைத்தே நான் அவ்வாறு கூறினேன் – என்றுள்ளது. (ஐ)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பம்பலப்பிட்டி அரசு தொடர்மாடிக் கட்டடத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் இந்தக் கூட்டம் நேற்று மாலை 5 மணி முதல் 8 மணி வரை நடைபெற்றது.

கட்சியின் கொழும்பு மாவட்டக்கிளை உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி நிச்சயம் களமிறங்க வேண்டும் என்ற கருத்து அனைவராலும் முன் வைக்கப்பட்டதாக அறியவந்தது.

எனினும், கொழும்பிலிருந்து ஏற்கனவே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழர் தரப்பைப் பாதிப்படையச் செய்து, ஒட்டுமொத்தத் தமிழ்ப் பிரதிநித்துவத்தையும் கெடுத்துவிடக்கூடாது என்ற கருத்தும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே மனோ கணேசன் தரப்பு தமிழர்களைக் கொழும்பில் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றது. அவர்களும் இலங்கையில் ஒரு சிறுபான்மை இனத்தவர்கள். இன்னொரு சிறுபான்மை இனத்தின் பிரதிநிதித்துவத்தை மற்றொரு சிறுபான்மை இனத்தவர்களான வடக்குக் கிழக்குமத் தமிழர்கள் முறியடித்து இல்லாமலாக்கினார்கள் என்ற அவப்பெயர் வந்து விடக்கூடாது என்று அங்கு பேசிய இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஆகவே, இது குறித்து அவர்களுடனும் பேசி இணக்கமான ஓர் உடன்பாட்டுக்கு வருவதே உசிதமானது என்றார் அவர்.

எனவே, இந்த விடயம் குறித்து பல தரப்பினருடனும் பேச்சு நடத்திய பின்னர், விரைவில் மாவட்டக்கிளைக் கூட்டத்தைக் கூட்டி இறுதித் தீர்மானம் எடுப்பது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (உ)

## நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்கு சட்ட மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார்.

மேல்நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியவேளை கிஹான் பிலப்பிட்டிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடியதன் மூலம் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அவரைக் கைது செய்ய சட்ட மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

தவறான ஆதாரங்களை உருவாக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சதி செய்தார் என்பதற்கு போதுமான சான்றுகள் உள்ளன என்று சட்ட மா அதிபர் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

நீதிச் சேவையிலிருந்து இடைநீக்கப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி பிலப்பிட்டிய, நீதிவான் தம்மிகா ஹேமபாலா, முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க குணதிலக்க ஆகியோரின் தொலைபேசிப் பதிவுகளை நீதிமன்றின் உத்தரவுடன் பெற்றுக் கொள்ளுமாறும் சட்ட மா அதிபர், கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற போதே, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபயவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதை அவர் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக தகுதியான நபர் நியமிக்கப்பட்டுள்ளமையால் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் இல்லை எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## தென்பகுதியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொக்கிளாய் பகுதியில் தங்கியிருந்து வாடியொன்றில் உதவியாளராக செயற்பட்டுவந்த மீனவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் .

இந்த நபர் கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று வில்லுக்குளத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார் . இந்தச் சடலத்தைக் கண்ட சக மீனவர் கிராம அலுவலரிடம் முறையிட்டமையை அடுத்து கொக்கிளாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விசேட தடயவியல் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி ரதிநாதன் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு தோணி மூலம் கரைக்குக் கொண்டுவரப்பட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஜா–எல பகுதியை சேர்ந்த 63 வயதான மொகஸ்டீன் கிறிஸ்தோப்பர் என்பவராவார். (ஐ)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஒற்றுமைக்காக வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டமைப்பு அழைப்பு விடுப்பது வேடிக்கையானது என்றும் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பின் இந்த அழைப்பு என்பது வேடிக்கைக்குரிய ஒரு கோரிக்கை. அந்தத் தரப்புக்குள் உள்ள பங்காளிகளே மிக வெளிப்படையாகத் தங்களுக்கு இந்தத் தேர்தலில் பின்னடைவு வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக சொல்லியுள்ளனர். இதைத் தாண்டியும் அது சம்பந்தமாக நான் சொல்ல விரும்பவில்லை.

ஏதோவொரு காரணத்துக்காக அந்த ஒற்றுமையை முற்று முழுதாக நாசமாக்கிய தரப்பு திரும்பவும் ஒற்றுமையை பற்றி கதைப்பது ஒரு வேடிக்கையான விடயம். அப்படிப்பட்ட ஒரு விடயத்தை கருத்தலெடுக்கவும் தேவையில்லை. பதில் கூறவும் தேவையில்லை – என்றார். (ஐ–07)

## ஷானி அபேசேகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறியுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவில் நேற்றுக் காலை முன்னிலையானார்.

ரஞ்சன் ராமநாயக்க மாதிவெலயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்து கடந்த நான்காம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதன்போது பல இறுவட்டுக்கள் அவரின் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்டன. இதனையடுத்து குற்றப்புலனாய்வு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பான குரல் பதிவுகள் அனைத்தும் பகிரங்கமாகியிருந்தன.

இதனையடுத்து ஷானி அபேசேகர அண்மையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். மேலும் இந்தத் தொலைபேசி உரையாடல்கள் குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில், அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தீர்மானகரமான கால கட்டம்

இலங்கையில் தமிழர் தரப்புகள் தீவிரமாகத் தமக்குள் உரையாடி, ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டிய முக்கிய கட்டத்தில் இருக்கின்றன என நம்புகின்றோம்.

1976 இல் தனித் தமிழீழத்துக்கான வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எட்டிய இலங்கைத் தமிழினம், 1977 பொதுத்தேர்தலில் தனது ஆணையாக அதனை வெளிப்படுத்திப் பதிவு செய்துமிருந்தது.

அன்று முதல் அத்தீர்மானத்திற்கான போராட்டம் மிகத் தீவிரமடைந்தது. அஹிம்சை வழியிலும், ஆயுத மார்க்கத்திலும் அந்த ஆணையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு ஈழத் தமிழினம் எடுத்த முயற்சிகள் யாவும் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகள், பல்லாயிரம் பேரின் படுகாயங்கள், தலைமுறைச் சொத்து அழிவுகளோடு அவமாயிற்று.

2009 மேயில் முள்ளிவாய்க்காலோடு அது முற்றுப் பெற்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்து, அதன் வழியில் தமிழினத்தை பயணிக்க வழி காட்டிய தமிழர் தலைவர்களே இன்றும் பெரும்பாலும் தமிழினத் தலைவர்களாக நீடிக்கின்றனர். சுமந்திரனைப் போன்ற ஓரிருவரைத் தவிர, மற்றையவர்கள் எல்லாம் அதே 'பழசு'கள்தாம்!

எனினும், இப்போது தமிழினத்தின் செல்நெறி மாறுபாடான தளத்துக்குள் வந்து விட்டதாகத் தமிழ்த் தலைவர்கள் மீண்டும் மீண்டும் – வலிந்து வலிந்து – உரைகின்றார்கள்.

*'ஒன்றுபட்ட, பிளவுபடாத, பிரிக்க முடியாத, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு'* என்று அவர்கள் கூறுகின்றார்கள். 'சமஷ்டித் தீர்வு' என்பதை சொல்லளவில் கூட வலியுறுத்த விரும்பாத அவர்கள், தீர்வில் சமஷ்டிப் பண்பியல்புகள் இருந்தால் போதுமானது என்று கதை விடவும் தயங்குவதில்லை.

சம்ஷ்டியை வலியுறுத்தாத அவர்கள் 'ஒன்றுபட்ட', 'பிளவுபடாத', 'பிரிக்க முடியாத' என்ற சொல்லாடல்களை மட்டும் வலிந்து – கஷ்டப்பட்டு – மிக அழுத்திக் கூறிக் கருத்து வெளியிட்டு வருகின்றார்கள்.

இப்படிக் கூறியாகிலும் தீர்வு கிட்டாதா என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாகத்தான் இந்தப் போக்கைப் பார்க்க வேண்டும்.

2009 இல் பேரழிவு யுத்தத்தின் பயனாகத் தமிழினத்துக்கு கிடைத்த தோல்வி மனப்பான்மையின் – துவண்டு போன மனோ தைரியத்தின் – விளைவாகத்தான் இத்தகைய தீர்வு முயற்சியையும் பார்க்க வேண்டியுள்ளது.

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் ஒன்றாக வாழ விரும்புகின்றார்கள் என சுமந்திரன் கூறிய கூற்று உண்மைக்குப் புறம்பானது" – என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ள கருத்தும் இங்கு நோக்கப்பட வேண்டியதுதான்.

1977 இல் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு கொடுத்த ஆணை வேறு. இப்போது 'ஒன்றுபட்ட இலங்கைக்குள்' தீர்வு பெறுவதற்காகத் தமிழ் மக்கள் ஆணை கொடுத்த தேர்தல் வேறு என்று உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டுகின்றார். பிரிவினைக்கு எதிரான 6ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட வரையறைக்குள் நடத்தப்பட்ட தேர்தல்களின் முடிவையே தமிழ் மக்களின் தற்போதைய ஆணையாகச் சுமந்திரன் வெளிப்படுத்தி நிற்கின்றார் என உருத்திரகுமாரன் குறிப்பிடுகின்ற விடயத்திலும் ஆழமான – மறுக்கப்பட முடியாத – நியாயமான – அர்த்தங்கள் உண்டு.

இலங்கையின் இறுக்கமான, நெகிழ்வற்ற, இரும்புச் சட்டகம் போன்ற அரசமைப்பே இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டை என்று இலங்கையுடன் பல சமாதான பேச்சு முயற்சிகளில் ஈடுபட்ட புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் பல தடவைகள் கூறி வந்தார்.

அத்தகைய – இருக்கின்ற – யாப்பின் ஊடாக தீர்வை நோக்கி நகர்வது என்பது சாத்தியப்படவே போவதில்லை என்பதை யுத்தத்தின் பின்னராகக் கடந்த பத்தாண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பட்டறிவு தமக்குத் தந்து நிற்கின்றது.

*"தமிழர் தேசத்தின் எதிர்கால அரசியல் வரலாறு எந்தத் திசையில் செல்லும் என்பதைச் சிங்கள தேசத்தின் இனவாத சக்திகளே இறுதியாகத் தீர்மானிக்கும் என்பதை உறுதியாகச் சொல்லலாம்."* – என்ற முத்தாய்ப்போடு தமது 'போரும் சமாதானமும்' என்ற வரலாற்றுப் பதிவு நூலை நிறைவு செய்கின்றார் அன்டன் பாலசிங்கம்.

அந்தத் தீர்மானகரமான கட்டம் இதுதான் என நாம் நம்புகிறோம்.

பேரினவாதத்தின் இந்த அடக்குமுறைப் புள்ளியில் அதிலிருந்து மீண்டு புதிய பாதையில் தமிழினத்தை வழிநடத்திச் செல்வது எங்ஙனம் என்று சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெறுவது தொடர்பில் –

அதுவும் பேரெழுச்சியாய் விஸ்வரூபம் கொண்டு நிற்கும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தை மீறி அத்தீர்வை எட்டுவது தொடர்பில் –

தெளிவானதும், உருப்படியானதும், ஆழமானதீர்க்க தரிசனத்துடன் கூடியதுமான வழிகாட்டுச் சிந்தனை மையம் தமிழர் தரப்பிடமோ அதன் தலைமையிடமோ இல்லை. அந்த சிந்தனை வறுமையில் – தோல்வி மனப்பான்மையின் உச்சியில் – அடங்கிச் சுருண்டு போகும் தலைமைத்துவத்தினால் தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரமுடியாது என்பது நிதர்சனமானது.

அடுத்துவரும் தினங்களில் இப்பத்தியில் அது குறித்து சிந்திப்போம்!

# ஆதன வரி அதிகரிப்புக்கு எதிராக கிளிநொச்சியில் உண்ணாவிரதம்









கிளிநொச்சி, ஜன. 24

கரைச்சி பிரதேச சபையால் மக்களிடம் அதிகரித்த வீதத்தில் அறவிடப்பட்டு வரும் ஆதன வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வர்த்தகர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அதிகரித்த ஆதன வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்களும் நேற்றுப் பூட்டப்பட்டன.

கரைச்சி பிரதேச சபையால் கடந்த ஆண்டு இறுதியிலிருந்து ஆதனவரி அறவிடப்பட்டு வருகிறது. இந்த ஆதன வரியானது இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த வீதமான பத்து வீதமாக அறவிடப்பட்டுவருகிறது. இது கிளிநொச்சி போன்ற இலங்கையில் வறுமையில் முன்னிலை வகிக்கும் மாவட்டத்துக்குப் பொருத்தமற்றது.

யாழ்ப்பாணத்தில் கூட நான்கு, ஐந்து வீதங்களில் ஆதனவரி அறவிடப்படுகின்றபோது கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச சபையில் மட்டும் பத்து வீதம் அறவிடப்படுகிறது. இது போரினால் பாதிக்கப்பட்டு படிப்படியாக முன்னேறி வருகின்ற மக்கள் மீது சுமத்தப்படுகின்ற பெரும் சுமையாகும் எனத் தெரிவித்த வர்த்தகரான கு.மகேந்திரன், ஆதனவரியை நான்கு வீதமாகக் குறைக்குமாறு கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தனது மக்கள் நலன் சார்ந்த இந்தப் போராட்டத்துக்கு வர்த்தகர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் தரப்பினர்களின் ஆதரவையும் கோரி நிற்கின்றார்.

இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிளிநொச்சி நகரில் உணவகங்கள், மருந்தகங்கள் தவிர ஏனைய வியாபார நிலையங்கள் பூட்டப்பட்டு காணப்பட்டன.

இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், கரைச்சி பிரதேச சபையே! சுமத்தாதே! சுமத்தாதே! மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே!, மீண்டெழும் கிளிநொச்சியை வரிச்சுமையால் நசுக்காதே!, நியாயமான வரியை அறவிடு, மக்களுக்கு சேவையினை வழங்கு!, மரத்தால் வீழ்ந்த மக்களை மாடு மிதித்த கதையாய் மக்கள் மீது வரிச்சுமையை சுமத்தாதே!, மக்களுக்கான சேவைகளை வழங்காது வரிகளை மாத்திரம் அறவிடாதே!, கழிவுகளை அகற்ற முடியாத உனக்கு அதிகரித்த ஆதனவரி எதற்கு?, இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த ஆதன வரியை அறவிடுவது நியாயமா? குண்டுகளால் தாக்கப்பட்ட கிளிநொச்சி மக்களை வரியால் தாக்காதே! வரி மக்களின் நலனுக்காகவா உனது வசதிக்காகவா அறவிடுகிறாய்?– போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இப்போராட்டத்திற்கு வர்த்தக அமைப்புகள், மக்கள் அமைப்புக்கள், சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு, பொது மக்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் ஆதரவு தெரிவித்து கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# மனிதப் பிறப்பாக இருந்துகொண்டு மிருகமாகினால் வாழவேமுடியாது

## மாணவியைக் கொலை செய்தவருக்கு நீதிவான் கண்டிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிங்கள மாணவி கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவரது கணவரை வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனிதராகச் செயற்பட்டால்தான் வாழமுடியும். மனிதப் பிறப்பாக இருந்து கொண்டு மிருகமாகினால் வாழமுடியாது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேகநபரைக் கண்டித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுலாக் கடற்கரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி வருட மாணவி ஒருவர் நேற்று முன் தினம் புதன்கிழமை பிற்பகல் கழுத்தறுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டமையுடன், அவரது சடலம் கடலுக்குள் தள்ளிவிடப்பட்டிருந்தது.

கொழும்பு பேருவளையைச் சேர்ந்த ரோசினி ஹன்சனா (வயது – 29) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் கூடியிருந்த உள்ளூர் இளைஞர்கள் கொலையாளியைப் பின் தொடர்ந்து சென்றமையுடன், அவரைத் துரத்திப் பிடித்தனர். இளைஞர்களுக்கு அந்தப் பகுதியில் நின்ற விமானப் படையின் புலனாய்வு உத்தியோகத்தர்களும் உதவினர்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர் கிளிநொச்சி – பரந்தன் இராணுவ முகாமில் பணியாற்றும் படைச் சிப்பாய் ஆவார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அவர் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் இறப்பு விசாரணை இடம் பெற்றது. கொல்லப்பட்ட மாணவியின் தாயாரும் சகோதரனும் மன்றில் முன்னிலையாகி இறப்பு விசாரணையில் சாட்சியமளித்தனர்.

எதிரி மகளை 2017ஆம் ஆண்டு பதிவுத் திருமணம் செய்ததமையுடன் அவருடன் வாழ்ந்து வந்தார். அண்மைக்காலமாக இருவருக்கும் முரண்பாடுகள் இருந்தன என்று மாணவியின் தாயார் சாட்சியமளித்தார்.

மனிதனாக இருந்தால் மட்டுமே வாழ முடியும். மனிதப் பிறப்பாக இருந்து கொண்டு மிருகமானால் வாழ முடியாது என்று நீதிவான், எதிரிக் கூண்டில் நின்ற எதிரியைப் பார்த்து எச்சரித்தார். அத்துடன், எதிரியை வரும் பெப்ரவரி 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிமன்று, வழக்கு விசாரணையக அன்றைய தினம் வரை ஒத்திவைத்தது. (ஐ)

**நாளை 25.01.2020 – சனிக்கிழமை**

நட்சத்திரம்: திருவோணம் பி.இ 4.51 வரை
திதி : பிரதமை பி.இ 4.39 வரை
இராகுகாலம் : 9.36 – 11.06
சுப நேரம் : 3.36 – 5.06

## ரஞ்சன் ஆதாரங்களை சமர்ப்பிக்கவில்லை

### பிரதிச் சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 24

ஏற்கனவே அறிவித்தபடி எந்தவித ஒலிப்பதிவுகளையோ அல்லது இறுவட்டுகளையோ நாடாளுமன்றத்தில் இதுவரை ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. சமர்ப்பிக்கவில்லையெனப் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

ஏற்கனவே நேற்று முன்தினம் ரஞ்சன் சபையில் குரல் ஒலிப்பதிவு இறுவட்டுகளைச் சமர்ப்பித்தார் என ஹர்ஷடி சில்வா எம்.பி. சபையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாத்தறை வைத்தியசாலையில் குழந்தை பிரசவித்தாராம் ஆண்

கொழும்பு, ஜன. 24

வயிற்றுவலி காரணமாக நேற்று முன்தினம் அதிகாலை மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆணொருவர் குழந்தை பிரசவித்தார்.

நேற்று முன்தினம் காலை தனது அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் சகிதம் மாத்தறை வைத்தியசாலைக்குச் சென்ற ஆணொருவர் தனக்கு வயிற்றில் வலி இருப்பதாக தெரிவித்ததையடுத்து அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க மருத்துவர்கள் தீர்மானித்தனர்.

வயிற்றுவலி அதிகமானதையடுத்து அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஆண் போல நடித்த பெண் என்பதை கண்டறிந்து அவரைப் பிரசவ விடுதிக்கு அனுப்பினர். இதனையடுத்து ஆண் குழந்தை ஒன்று அவருக்கு பிறந்துள்ளது.

26 வயதுடைய தெவிநுவர பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு ஆண் போல வேடமிட்டு வந்தவரென்றும் நீண்ட நாள் இவர் அப்பகுதியில் ஓட்டோச் சாரதியாக தொழில் செய்து வந்தவரென்றும் தெரியவந்துள்ளது. (ஐ)

# கூட்டமைப்பை பேச்சுக்கு அழைக்கின்றார் கோட்டா

## தினேஷ் குணவர்தன சபையில் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 24

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக இரா. சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கிறார் என வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மட்டுமன்றி கூட்டமைப்பிலுள்ள அனைத்துத் தமிழ் எம்.பிக்களுக்கும் அரசு முழுமையான பாதுகாப்பை வழங்கி வருவதாகவும் எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அரசியல் ரீதியாக எந்தப் பாரபட்சமும் காட்டப்படுவதில்லை எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இரா. சம்பந்தன் தமக்கு வழங்கப்பட்டுள்ள வீடு தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கூற்று ஒன்றைச் சபையில் தெரிவித்தார். அவரது கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளில் எந்த மாற்றத்தையும் எமது அரசு மேற்கொள்ளவில்லை. அதேபோன்று முன்னாள் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகளும் முறைப்படி வழங்கப்பட்டு வருகின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கிணங்க வசதிகளும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தகைய கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் அரசு எந்தப் பாரபட்சமும் இன்றியே செயற்படுகிறது.

கடந்த ஆட்சியின்போதே இரா. சம்பந்தனுக்கு உத்தியோகபூர்வ இல்லம் தாமதமாகி வழங்கப்பட்டது. அதற்கு நாம் பொறுப்பல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் அரசு வசதிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது – என்றார். (ஐ)

# படிப்பது தேவாரம், இடிப்பதோ சிவன் கோவில் என்பதுபோல்தான் கோட்டாபய அரசின் பயணம்

## சாடுகின்றார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, ஜன. 24

கண்டி மாவட்டத்தில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவந்த வீட்டுத்திட்டங்களைக்கூட கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு இடைநிறுத்தியுள்ளமையானது பெரும் அநீதியான செயலாகும் – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

படிப்பது தேவாரம், இடிப்பதோ சிவன் கோவில் என்பதுபோல்தான் இந்த அரசின் பயணம் அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட செயற்பாட்டாளர்களுடன், கண்டி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு: –

நல்லாட்சிமூலம் கண்டி மாவட்டத்தில் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சில அபிவிருத்தித் திட்டங்களை இந்த நயவஞ்சக அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களும் முடங்கியுள்ளன.

குறிப்பாக கண்டி அந்தான, கெலபொக்க ஆகிய தோட்டங்களில் குடியிருப்பாளர்களின் பங்களிப்புடன் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களும் கைவிடப்பட்டுள்ளன. அரசாங்க பங்களிப்பு இல்லாததால் தனி வீட்டுக்காகக் காத்திருந்த மக்கள் பரிதவிக்கின்றனர்.

அதுமட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த தமிழ் மக்களைப் பழிவாங்கும் நோக்கில் அரசியல் கைக்கூலிகளை ஏவிவிட்டு தோட்டப் பகுதி வீடுகள் அடித்து நொறுக்கப்படும் பயங்கர நிலையும் உருவாகியுள்ளது. நாவலப்பிட்டிய பார்கேபல் சம்பவம் இதற்குச் சான்றாகும்.

இவ்வாறான அநீதிகளைத் தட்டிக்கேட்காமல், அவற்றை நியாயப்படுத்தும் வகையிலேயே அரசாங்கத்திலுள்ள தலையாட்டி தமிழ் அரசியல்வாதிகளும் விஞ்ஞான விளக்கங்களை வழங்கிவருகின்றனர்.

ஆட்சிமாறலாம். ஆனால், மக்கள் நலன்சார்ந்த கொள்கைகள் மாறக்கூடாது. மக்களுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும். இந்தக் கோட்பாட்டை மறந்து நயவஞ்சக அரசாகவே தற்போதைய அரசு செயற்பட்டு வருகின்றது.

படிப்பது தேவாரம் இடிப்பதோ சிவன் கோவில் என்பதுபோல், வெளியில் நல்லமுகத்தை காட்டிக்கொண்டு அடிமட்டத்தில் திட்டமிட்ட வகையில் பழிவாங்கல்கள் இடம்பெற்றுவருகின்றன. தமிழ் பேசும் மக்கள் வஞ்சிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. அடுத்த பொதுத்தேர்தலில் வாக்கு வேட்டை நடத்துவதற்காக இனவாதத்தை மீண்டும் கையிலெடுத்துள்ளனர். அபிவிருத்தி திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமைகூட இதன் ஓர் அங்கமாகும் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

சுழிபுரம், பத்தானைகேணியடி, மாவடி, மூளாய், K.M.K Sea Foods (PVT) ltd, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, மாவைகலட்டி, கீரிமலை கடற்படை முகாம், Solid Wastage Disposal Keerimalai ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பகல அளுத்வத்த கிராமம், பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரைக்கும், மனிக்பார்ம் I, II, III மற்றும் IV ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், தலைமன்னார் Palmyrah house, தலைமன்னார் வைத்தியசாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house, கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate I and II; ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்: அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

## எம்.ஜி.ஆர். பிறந்தநாள் கூட்டத்தில் குண்டு வீச்சு; எம்.எல்.ஏக்குக் காயம்



பெங்களூரின் சாந்திநகர் பகுதியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். பிறந்தநாள் கூட்டத்தில் நாட்டு வெடி குண்டு வீசப்பட்டதில் அத்தொகுதியின் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏயான ஹாரிஸ் உள்பட 5 பேர் காயம் அடைந்தனர்.

கூட்டத்தில் இருந்த சிலர் எம்.எல்.ஏயை நோக்கிக் குண்டு வீசியதாக அவருடைய மகன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். காயம் அடைந்த எம்.எல்.ஏ. உள்ளிட்ட அனைவரும் அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் வெடிகுண்டு நிபுணர்களும் காவல்துறையினரும் மோப்ப நாய்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

## தீ விபத்தில் 10 பேரைக் காப்பாற்றிய பன்னிரு வயது சிறுமிக்கு வீரதீர விருது



மகாராஷ்டிராவில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிய 10 பேரைக் காப்பாற்றிய 12 வயது சிறுமிக்கு வீரதீர விருது வழங்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு மும்பையின் பரேல் பகுதியில் உள்ள கிறிஸ்டல் டவர் என்ற அடுக்கு மாடிக் கட்டடத்தில் தீப்பிடித்தது. இந்த விபத்தைக் கண்ட ஜென் சதாவர்டே என்ற 12 வயது சிறுமி, தனது உயிரையும் பொருட்படுத்தாமல் எரியும் நெருப்புக்குள் சென்று சிறுமி 10 பேரைக் காப்பாற்றினார்.

அவர் படிக்கும் பள்ளியில் நடந்த பேரிடர் மேலாண்மை பயிற்சி வகுப்பின் போது கற்றுக் கொண்ட பாடங்களை நினைவில் வைத்து தீயில் சிக்கியவர்களைக் காப்பாற்றினார் என அவர் தெரிவித்தார். இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டுக்கான வீர தீரச் செயலுக்கான விருது டெல்லியில் நடந்த விழாவில் ஜென் சதாவர்டேவுக்கு வழங்கப்பட்டது.



## தூங்கா நகரமாகிறது மும்பை..!

மும்பையில் இரவிலும் வர்த்தகத்திற்கு அனுமதியளிக்கும் திட்டத்திற்கு மகாராஷ்டிரா அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வரும் 27 ஆம் திகதி முதல் மும்பை நகரில் 24 மணிநேரமும் மோல்கள், கடைகள், திரையரங்குகள், பார்கள், மதுக்கடைகள், உணவகங்கள் போன்றவற்றைத் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக குடியிருப்புகள் இல்லாத பகுதிகளில் மட்டும் கடைகள் திறக்க அனுமதியளிக்கப்படும் என்று முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இத்திட்டத்திற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக செய்தியாளர்களிடம் கூறிய அவர், இரவு முழுவதும் கடைகளை திறக்க வியாபாரிகள் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் அது அவரவர் சொந்த விருப்பம் என்றும் தெரிவித்தார்.

5 லட்சம் பேருக்கு இரவு வர்த்தகத்தால் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

## சபரிமலைக்கு இம்முறை ரூ.263 கோடி வருமானம்

சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜை தரிசனத்தின்போது 263 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக திருவிதாங்கூர் தேவசம் போர்டு அறிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 16 ஆம் திகதி திறக்கப்பட்ட ஐயப்பன் கோவில் நடை செவ்வாய்க்கிழமை அதிகாலை சாத்தப்பட்டது.

இரண்டு மாதங்களில் கோவிலுக்கு வந்த பக்தர்கள் மூலம் 263 கோடியே 46 லட்சம் ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் கிடைத்ததைவிட நடப்பாண்டில் 95 கோடியே 35 லட்சம் ரூபா அதிகம் கிடைத்துள்ளது.

## ரூ.80ஆயிரம் கோடி ஜம்மு - காஷ்மீருக்கு!

### அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கியது இந்திய மத்திய அரசு



ஜம்மு காஷ்மீரில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இந்திய மத்திய அரசு 80 ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு நீக்கியது. பின்னர் அந்த மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாகவும் பிரித்தது. இதனால் ஏற்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிக்க மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு, தகவல் தொடர்பு துண்டிப்பு, இணையதள வசதி நிறுத்தம் எனப் பல்வேறு கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிலையில் தற்போது படிப்படியாக இயல்பு நிலை திரும்பியதை தொடர்ந்து, இணைய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மத்திய அரசு காஷ்மீர் மாநிலத்திற்கு பல்வேறு வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இதற்காக 80 ஆயிரம் கோடி ரூபா நிதியை அம்மாநில வளர்ச்சிக்காக ஒதுக்கி உள்ளதாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த நிதியானது நெடுஞ்சாலை, மின்சார உற்பத்தி, நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்துதல், எய்ம்ஸ், ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம். உள்ளிட்டவற்றிக்காக பயன்படுத்தப்படும் என அதிகாரிகள் கூறியுள்ளார். மத்திய அரசின் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட திட்டங்களை ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு எடுத்து சென்று அம்மாநிலத்தில் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு, தொழில்துறை வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை பெருக்குவது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவாமி நித்தியானந்தாவை மடக்கும் ஏற்பாடு தீவிரமாம்!

பெங்களூர், ஜன.24

கியூபா மற்றும் மெக்ஸிக்கோவுக்கு அருகே உள்ள கரீபியன் தீவில் சுவாமி நித்தியானந்தா பதுங்கி இருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ள நிலையில் அவரைக் கைது செய்ய சர்வதேச பொலிஸார் தீவிரம் காட்டி வருகின்றனர் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் ஆசிரமங்களை நடத்தி வரும் சுவாமியார் நித்தியானந்தா மீது பல்வேறு புகார்கள் எழுந்தன.

குஜராத்தில் உள்ள ஆசிரமத்தில் தனது மகள்களைக் கடத்தி சிறை வைத்துள்ளார் என பெங்களூரை சேர்ந்த ஜனார்த்தன சர்மா என்பவர் பொலிஸில் முறைப்பாடு அளித்தார். அதன்பேரில் நித்தியானந்தா மீது அகமதாபாத் பொலிஸார் கடத்தல் வழக்குப்பதிவு செய்தனர்.

ஏற்கனவே கர்நாடகவில் நித்தியானந்தா மீது பாலியல் வழக்கு உள்ளது. அடுத்தடுத்து வழக்குகள் பாய்ந்தமையால் நித்தியானந்தா வெளிநாடு தப்பி ஓடித் தலைமறைவாகி விட்டார்.

அவர் ஈகுவெடார் அருகே ஒரு தீவை விலைக்கு வாங்கி 'கைலாசா' எனப் பெயர் சூட்டி தனி நாடாக அறிவிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியது.

தனது கைலாசா நாட்டில் குடியேற 40 லட்சம் பேர் ஒன்லைன் மூலம் விண்ணப்பித்துள்ளனர் என நித்யானந்தா வீடியோ வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து பல வீடியோக்களை வெளியிட்ட அவர் தன் மீது பொலிஸார் பொய் வழக்கு போடுகின்றனர் எனக் குற்றம் சாட்டினார். இதற்கிடையே, அவரது ஆசிரமத்தில் கடத்தி சிறை வைக்கப்பட்டுள்ளனர் எனப் புகார் கூறப்பட்ட இரு இளம் பெண்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக் கோரிய ஆள்கொணர்வு மனு விசாரணையின் போது நித்யானந்தா வெளிநாடு தப்பி சென்று விட்டதை பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து சர்வதேச பொலிஸ் (இன்டர்போல்) உதவியுடன் நித்தியானந்தாவைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கடந்த டிசம்பர் மாதம் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்பேரில் சி.பி.ஐ. மூலம் சர்வதேச பொலிஸைக் குஜராத் பொலிஸார் அணுகி நித்தியானந்தாவைக் கண்டுபிடிக்க உதவுமாறு வேண்டுகோள் வைத்தனர். இதன் அடிப்படையில் நித்தியானந்தாவுக்கு எதிராக சர்வதேச போலீசார் 'புளூ கோர்னர்' நோட்டீஸ் பிறப்பித்துள்ளனர்.



குற்ற வழக்கில் தேடப்படும் ஒருவரின் அடையாளம், இருப்பிடம், செயல்பாடுகள் ஆகியவை குறித்து தகவல் தெரிந்தால் சம்பந்தப்பட்ட நாடுகள் சர்வதேச பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே 'புளூ கோர்னர்' நோட்டீஸ் பிறப்பிக்கப்படுகிறது. இதன் மூலம் சர்வதேச பொலிஸாரின் அதிகாரத்துக்குட்பட்ட 150 நாடுகளில் நித்தியானந்தா எங்கு பதுங்கி இருக்கிறார் என்ற விவரம் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு நித்தியானந்தாவின் இருப்பிடம் தெரிந்ததும் அவரைக் கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் 'ரெட் கோர்னர்' நோட்டீஸ் பிறப்பிப்பார்கள்.

இதற்கான நடவடிக்கைகளையும் தாங்கள் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றனர் என குஜராத் போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நித்யானந்தா கியூபா மற்றும் மெக்ஸிக்கோவுக்கு அருகே உள்ள கரீபியன் தீவில் பதுங்கி இருக்கிறார் எனத்தகவல்கள் வெளியாகி உள்ளன. இதற்காக கடந்த சில மாதங்களுக்கு முன்பு அவர் அந்நாட்டு குடிமக்களுக்கு வழங்கப்படும் 'பெலிஸ்' பாஸ்போர்ட்டை வாங்கி இருக்கிறார் எனவும் கூறப்படுகிறது. எனினும் இதை பொலிஸ் அதிகாரிகள் யாரும் உறுதிபடுத்தவில்லை.

நித்தியானந்தா புதிய பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தி எங்கும் பயணம் செய்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை எனக் கூறிய பொலிஸ் அதிகாரிகள் அவருக்கு எதிராக 'புளூ கோர்னர்' நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அவரது அனைத்து நகர்வுகளும் முழுமையாகக் கண்காணிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

# கொலம்பியாவில் போராட்டத்தில் கலவரம்



தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் நடந்த போராட்டத்தில் கலவரம் மூண்டது.

அந்நாட்டின் ஜனாதிபதி இவான் டியூக்கின் சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக பல மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது.

மனித உரிமை ஆர்வலர்கள் கொல்லப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்துவது, இடது சாரிப் போராட்டக்காரர்களுடனான சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்து வது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாட்டின் பல இடங்களில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில் தலைநகர் பொகோட்டாவில் நடந்த போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டதையடுத்து கற்களை வீசி தாக்குதல் நடத்திய போராட்டக்காரர்களை மபொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை ஏவிக் கலைத்தனர்.

## சீனாவில் கொரோனா வைரஸ் காய்ச்சலுக்கு 17பேர் பலி: இதுவரை 571 பேருக்குப் பாதிப்பு



பெய்ஜிங்,ஜன.24

சீனாவில் கொரோனா என்ற மர்ம வைரஸ் காய்ச்சல் தீவிரமுடன் பரவி வருகிறது. முதலில் வுகான் நகரில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ், நாட்டின் தலைநகர் பெய்ஜிங் மற்றும் ஙாங்காய் உள்ளிட்ட நகரங்களிலும் பரவி வருகிறது.

முதலில் வுகான் நகரில் உள்ள ஒரு கடல் உணவு மற்றும் வனவிலங்கு சந்தையில் பாதிக்கப்பட்ட விலங்குகளிடம் இருந்துதான் இந்த வைரஸ் தோன்றியதாகத் தகவல்கள் கூறுகின்றன.

சீனாவில் புதிய வகை கொரோனா வைரஸ் பாதிப்பு 1.1கோடி பேர் வசித்து வரும் வுகானில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு முதலில் 3 பேர் பலியாகி உள்ளனர் என வுகான் நகர சுகாதார ஆணையம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்திருந்தது. இதனை தொடர்ந்து, வைரஸ் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வைரஸ் 440 பேரிடம் பாதிப்பு ஏற்படுத்தி உள்ளது என்றும் பலி எண்ணிக்கை 9 ஆக உயர்வடைந்து உள்ளது என்றும் சீன சுகாதார அதிகாரிகள் சார்பில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று ஜப்பான் மற்றும் தென்கொரியாவில் தலா ஒருவரும், தாய்லாந்து நாட்டில் 3 பேரும், அமெரிக்கா மற்றும் தைவான் நாடுகளில் தலா ஒருவரும் வைரஸ் பாதிப்பிற்கு ஆளாகி உள்ளனர்.

இதனிடையே, சீன சுகாதார ஆணையம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள செய்தியில், கொரோனா வைரஸ் 571 பேருக்கு பாதிப்பு ஏற்படுத்தி உள்ளது. சீனா முழுவதும் இதற்கு 17 பேர் பலியாகி உள்ளனர். இவர்களில் பெருமளவிலானோர் கடந்த டிசம்பர் இறுதியில் முதன்முறையாக கொரோனா வைரஸ் பாதிப்பு பற்றி அறியப்பட்ட வுகான் வுகான் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்தவர்கள் ஆவர் எனத் தெரிவித்து உள்ளது.

அந்நாட்டுக்கு பயணம் செய்வது பற்றி இந்தியா முன்பே எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. வுகான் நகரில் மருத்துவம் மற்றும் பிற படிப்புகளை படித்து வரும் 700 இந்திய மாணவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி கேட்டு கொள்ளப்பட்டனர். அவர்களில் பலர் விடுமுறையை முன்னிட்டு அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டனர்.

ஙாங்காய் நகரிலும் 7 பேருக்கு இந்த வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இதனை அடுத்து வுகான் நகரில் பேருந்து போக்குவரத்து சேவை தற்காலிக ரத்து செய்யப்பட்டு உள்ளது. ரெயில்வே நிலையங்கள் மற்றும் விமான நிலையங்கள் இன்று காலை 10 மணி முதல் சேவையை நிறுத்தி வைத்துள்ளது.

வுகான் நகர குடியிருப்புவாசிகள் வைரஸ் பரவாமல் இருப்பதற்காக முகமூடிகளை அணிந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

## லெபனானில் முதல் முறையாக பாதுகாப்பு அமைச்சராகப் பெண்



பெய்ரூட்,ஜன.24

லெபனானில் முதன்முதலாக இராணுவ அமைச்சராக ஜீனா அகர் என்ற பெண்மணி பதவி ஏற்றார்.

லெபனான் நாட்டில் பிரதமராக இருந்து வந்த சாத் ஹரிரி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பதவி விலகினார்.

அதைத் தொடர்ந்து அந்த நாட்டில் புதிய பிரதமராக பெய்ரூட் அமெரிக்க பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஹசன் டயப்பை அதிபர் மைக்கேல் அவுன் நியமித்தார். புதிய பிரதமர் ஹசன் டயப் தனது புதிய அரசை நேற்று முன்தினம் அமைத்தார்.

முந்தைய சாத் ஹரிரி அரசில் 30 அமைச்சர்கள் இடம்பெற்றிருந்த வேளையில், இப்போது ஹசன் டயப்பின் புதிய அமைச்சர்கள் எண்ணிக்கை 20 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 பேர் பெண்கள் ஆவர். 5 பேரில் ஒருவரான ஜீனா அகர்,ராணுவ அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். இவர் துணைப் பிரதமராகவும் பதவி வகிப்பார். லெபனான் வரலாற்றில் இராணுவ துறைக்குப் பெண் ஒருவர் அமைச்சராகி இருப்பது இதுவே முதல் முறை.

புதிய அரசு நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு முடிவு கட்ட வேண்டும், பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்ட வேண்டும் என்று முற்போக்கு சோசலிச கட்சி எம்.பி. பிலால் அப்துல்லா வலியுறுத்தி உள்ளார்.

## ஸ்பெயினில் சூறாவளி, கடல் சீற்றம்



ஸ்பெயின் நாட்டில் வீசிய பெருங்காற்று மற்றும் பேரலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கிப் போனது.

அந்நாட்டின் மல்லோர்கா என்ற இடத்தில் வீசிய சூறாவளிக்காற்றின் காரணமாக கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதனால் உருவான நுரை மல்லோர்கா நகர் பகுதியில் புகுந்தது. மேலும் கடல் நீரும் ஊருக்குள் புகுந்தது. இதன் காரணமாக மூச்சுத்திணறியும் பல்வேறு காரணிகளாலும் 8 பேர் வரை உயிரிழந்தனர்.

அதிவேகக் காற்று காரணமாக குறிப்பிட்ட பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கேட்டலோனியா பகுதியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக 60 அடி உயரத்திற்கும் அதிகமாக அலைகள் வீசின.

## வெப்பமயமாதல் குறித்து அதிகம் பேசுவோர் முட்டாள்களின் வாரிசுகள் என்கிறார் டிரம்ப்

புவி வெப்பமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து அதிகம் பேசுபவர்கள், முட்டாள்களின் வாரிசுகளாகவே இருக்க முடியும் என்ற அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் பேச்சுக்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது.



சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும், 'தாவோஸ் – உலகப் பொருளாதார மன்ற' கூட்டத்தில் பேசிய சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா தன்பெர்க், உலகத் தலைவர்கள், சுற்றுச்சூழலைக் காக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என வெற்று வார்த்தைகளை உதிர்த்து வருகின்றனர் எனவும், அவர்களை நம்பமாட்டோம், மன்னிக்க மாட்டோம் எனவும் குறினார்.

இதன் பின்னர் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், பேரழிவு பற்றிய கணிப்புகளை எப்போதும் நிராகரிக்க வேண்டும் என்றார். கிரேட்டா தன்பெர்க் கூறுவதைக் கேட்க நேரமில்லை என்ற அவர், புவி வெப்பமயமாதல் குறித்து அதிகம் பேசுபவர்கள், முட்டாள்களின் வாரிசுகளாகவே இருக்க முடியும் என்றார். டிரம்பின் இந்தப் பேச்சுக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



# வெள்ளிதோறும் சைவக்கதிர்





முனைவர் ஆறு.நாகப்பன்

# சைவ சமயத்தையும் சைவ சித்தாந்தத்தையும் மறுதலிப்பது தமிழனுக்குக் கடவுள் சிந்தனையே இல்லை என்பதாகிவிடும்

இந்து சமயம் அல்லது சைவ சமயம் எதுவாக இருந்தாலும் தமிழர் சமயம் குறித்த சரியான பார்வை இக்காலம் வரை எங்கும் பார்க்கப்படவில்லை. சமய விளிம்புகளின் இரு கோடிகள் மட்டுமே இதுவரை பேசப்பட்டுள்ளன. முரட்டுத் தனமான நம்பிக்கைகள் ஒரு பக்கமும் அதே முரட்டுத்தனமான மறுப்புகள் ஒரு பக்கமும் காணப்பட்டன. காட்டப்பட்டன.

ஏதோ சில நூல்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நம்பிக்கைகளே சமயங்களுக்கான பொதுத் தளம் என்பது பிழையல்ல. ஆனால் இது எல்லாச் சமயங்களுக்கும் பொருந்தாது. பலவாகிய இந்திய சமயங்கள் அனைத்தையும் ஆராய்வது இந்த இடத்தில் வேண்டாம் என்பதால் இரண்டே இரண்டு சிந்தனைக் கட்டுமானங்களை மட்டும் தேவைப்பட்ட அளவுக்கு பார்த்துக் கொண்டால் சமயம் குறித்த சரியான பார்வை ஒன்று கிடைக்கும் என்பது என் கருத்து.

முதலாவது இந்து சமயம் என்ற பொதுப் பெயரில் வைதீகம் விரித்திருக்கும் அகன்ற வலை. இருக்கு முதலிய வேதங்களின் அடிப்படையில் அமைந்த வைதீகப் பண்பாடு வேள்வி, வருணாசிரமம், சமற்கிருதம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிராமணீய வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. பிறப்பால் வரும் சாதிமையைப் போற்றுவது வருணாசிரமம் . இதுவே பிராமணீயத்தின் அடித்தளம்.

பிராமணீயம் இந்தியப் பெருநிலம் முழுவதும் பரவியது. உலகியல் செல்வம் அனைத்தும் பெறலாம் என்னும் வேட்கையை முன்னிறுத்தியதால் வேத வேள்வி தமிழ் அரசர்களையும் செல்வந்தர்களையும் விரைந்து கவர்ந்தது. இதன் வழித் தமிழ் நாட்டு அரண்மனைகளின் செங்கோல்களை வைதீகம் கைப்பற்றியது.

மற்றொன்று தமிழர் உருவாக்கிய மெய்ப்பொருள் சிந்தனை. மரபு சார் ஊர்த்தெய்வங்கள் பலவும் நம்பிக்கைத் தளங்களில் ஊன்றி நின்றன. குல தெய்வம் அல்லது இல்லுறை தெய்வம், காவல் தெய்வங்கள், வீரர்களுக்கான நடுகல் வழிபாடு போன்றவை தமிழரின் மரபு சார் மதங்கள் ஆகும். தொல்காப்பியம் குறிக்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்திணைகளுக்கும் முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகியவை தமிழரின் தொன்மைத் தெய்வங்கள். இவற்றுள் இந்திரன், வருணன் என்பவை வைதீகத்தின் சாயல் பெற்றுத் திரிந்த பெயர்கள்.

சங்க காலத்தில் மரபு சார் சிறுதெய்வங்கள் பலவும் வழக்கில் இருந்த போது சிவபெருமான் ‘பிறவா யாக்கை பெரியோன்’ என இளங்கோவடிகளால் குறிப்பிடப்பெற்றார். சிவபெருமானின் தோற்றப் பொலிவைக் குறிக்கும் தொடர்கள் பலவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

### சித்தாந்தம் என்ற மெய்யறிவு

நம்பிக்கை சார்ந்த சிறுதெய்வங்களின் வழிபாடு மலிந்திருந்த காலத்தில் அறிவு சார்ந்த சிவ வழிபாடு சான்றோர் சிந்தனையில் வளர்ந்து சித்தாந்தம் என்ற மெய்யறிவுத் துறையாக அமைந்தது.

கடவுளுக்குக் கடவுள் தேவையில்லை, சடப் பொருள்களுக்கு அறிவும் உணர்வும் இன்மையால் அவற்றுக்கும் கடவுள் தேவையில்லை. ஆகவே சடப் பொருள்களைக் கருவி கரணங்களாகக் கொண்டு உலகைத் துய்க்கும் அறிவும் உணர்வும் உடைய உயிர் என்னும் பொருள் இருக்கத்தான் வேண்டும் என்பது உயிர் உண்மையை நிறுவும் வாதம். இல்லது தோன்றாது என்னும் வாதத்தால் உள்ளதாகிய மூலப் பொருள் ஒன்றிலிருந்தே உலகம் தோன்றியிருக்க வேண்டும் என்பது மாயையை நிறுவும் வாதம்.

உலகின் இருப்பை ஆராய்ந்து அவன், அவள், அது என்னும் அவயவப் பகுப்புடையதாய் இருக்கும் இவ்வுலகம் சடமாதலால் தானே தோன்றி, நின்று அழியாது என்றும் எல்லா உலகங்களையும் முற்றாக அழிக்கும் ஆற்றல் உள்ளவனே உலகைப் படைப்பவனாயும் உலகுக்கு ஆதியாயும் இருப்பான் என்றும் கடவுள் இருப்பைச் சைவம் நிறுவுகிறது.

உயிர், மாயை, கடவுள் தவிர வேறு இரண்டு பொருள்களும் கடவுளால் படைக்கப்படாமல் என்றும் உள்ள பொருள்களாக உள்ளன. என்றும் உள்ள உயிர்களின் இயல்பாகிய அறிவு, இச்சை, செயல் ஆகிய ஆற்றல்களை மறைத்து அவற்றுக்கு அறியாமையை ஏற்படுத்தியிருக்கும் ஆணவம் என்பது ஒன்று. ஆணவத்தை அகற்றுவதற்கு உயிர்களைச் செயல்படுத்திப் பக்குவப்படுத்தும் வினை மற்றொன்று.

அறிவு சார்ந்த இந்த வாதங்களால் உயிர், மாயை, கடவுள், ஆணவம், வினை ஆகிய பொருள்கள் தோற்றம் அழிவு இன்றி என்றும் இருப்பவை என்று கூறுவது சித்தாந்தம். கடவுளின் இருப்பைப் பதி உண்மை என்றும் கடவுளின் சிறப்பைப் பதி இலக்கணம் என்றும் சித்தாந்தம் விரித்துப் பேசியது.

என்றும் உள்ள உயிர்களுக்கு என்றும் உள்ள மாயையிலிருந்து உடல், உலகங்கள், உயிர்க்கான நுகர்ச்சிப் பொருள்களை இறைவன் படைத்துக் கொடுக்கிறான். படைத்தவற்றை உயிர்கள் நுகர்ந்து பக்குவப்படும் வரை காக்கின்றான். உயிர்கள் பிறந்தும் இறந்தும் பக்குவப்படும் வரை தன்னை மறைக்கின்றான். பிறப்பு இறப்பிலிருந்து இளைப்பாறும் பொருட்டு படைத்தவற்றை அழிக்கின்றான். பக்குவப்பட்ட உயிர்களை இடையறா இன்பத்தில் நிலைக்க அருளுகின்றான். இவ்வாறு படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்னும் ஐந்தொழிகளை உயிர்கள் பொருட்டு இறைவன் செய்தபடி இருக்கின்றான் என்பது சித்தாந்தம்.

### சைவத்தின் வேதம்

இருபத்தெட்டு சைவ ஆகமங்களைத் தனக்கு வேதமாய்க் கொண்டது சிவனைப் போற்றும் சைவம். ஆகமங்களின் செயல்முறை நூலாக அமைவது பன்னிரு திருமுறைகள். இவ்விரண்டு நூல்களின் வழியில் அமைந்தவை பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள். இவற்றுள் ஆகமம் விதி நூல், திருமுறை செயல் நூல், மெய்கண்ட சாத்திரங்கள் சைவத்தின் இலக்கண நூல்கள். மற்றோர் முறையில் கூறினால் சைவத்தின் வேதம் ஆகமம், மெய்யறிவு நூல் மெய்கண்ட சாத்திரங்கள், மெய்யுணர்வு (பத்தி) நூல் திருமுறைகள்.

சைவம் இமயம் முதல் குமரி வரை பல அடைமொழிகளைக் கொண்டு விரிந்தது. என்றாலும் தென் தமிழ் நாட்டில் நுண்ணிய தத்துவத் துறையாக செம்மைப்பட்டது. இதன் வளத்தை இந்தியச் சிறு மதங்கள் யாவும் பங்கிட்டுக் கொண்டன. கணபதியைப் போற்றும் காணாபத்தியம், முருகனைப் போற்றும் கௌமாரம், சக்தியைப் போற்றும் சாக்தம் ஆகிய மதங்கள் யாவும் முறையே சிவனின் பிள்ளைகள் என்றும் மனைவி என்றும் உறவு முறைகளால் தம் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டன.

### அவைதீகமும் வைதீகமும்

உறவுமுறைகளை வலிமைப்படுத்த ஏராளமான புராணங்கள் உருவாக்கப்பட்டன. தமிழர் சமயக் கிரியைகளோடு வைதீக வேள்விக் கிரியைகள் கலந்தன. ஆரிய பிராமணர்களின் தொழில் வளம் கருதி உருவாக்கப்பட்ட கிரியைகள் அறிவுக்கு ஒவ்வா நம்பிக்கைகளை உருவாக்கின. இன்றும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

தனிப்பெரும் சமயமான சைவம் தென்னிந்தியச் சிறு சமயங்கள் உயிர்த்து உறுதி பெற உதவிய காலத்தில் வைதீகம் சைவம் உட்பட அனைத்துச் சமயங்களையும் வாரி விழுங்கித் தன் வயிற்றில் அடக்கிக் கொண்டது. இதனால் வேதங்களை ஏற்காத சமணம், பௌத்தம் அவைதீகம் என்றும் மற்றவை அனைத்தும் வைதீகம் என்றும் ஆரிய மயப்பட்டன.

இக்காலத்தில் தமிழரின் பழஞ்சமயங்களான கிராமத்துத் தெய்வங்கள் வைதீகத்தின் கைகளுக்குத் தப்பித் தம் மரபுகளைக் காத்துக் கொண்டன. சிற்றூர்களைக் கடந்து விரிந்த சமயங்கள் வைதீகத்தில் கலந்து உரு மாறின. முருகன் சுப்ரமணியன், கந்தன் என்றும் திருமால் விஷ்ணு என்றும் மாற்றம் கண்டனர். நிலத்திணை கடந்து பொதுக் கடவுளாய் இருந்த சிவன் உருத்திரன் ஆனான். தமிழர் அமைத்த கோயில்களில் பிராமணர் பூசகராயும் சமற்கிருதம் பூசனை மொழியாகவும் ஆனது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த அரசர்களே இதற்கெல்லாம் வழி கொடுத்து வணங்கி நின்றனர்.

### நால்வரின் அரும்பணி

ஆரிய மயப்பட்ட சைவ சமயத்தை மீட்டுப் புத்துருவாக்கம் செய்யும் முயற்சியில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பெருமக்கள் அரும்பாடு பட்டனர். சமண, பௌத்த மதங்களின் வலிமையை எதிர்கொள்ள இயலாத நிலையில் வைதீகத்தைப் பகைத்துக் கொள்ளாமல் அதே வேளையில் சைவத்தையும் தமிழையும் மீட்கும் போராட்ட முறையை மேற்கொண்டனர்.

சமற்கிருத மொழியைத் தேவபாடை என்று கூறும் பிராமண மரபில் வந்த திருஞானசம்பந்தர் தன்னைத் தமிழ்ஞானசம்பந்தர் என்று வலிந்து பல பாடல்களில் குறிப்பிட்டார். வைதீக நெறிக்கு ஒவ்வாத உருவ வழிபாட்டு மரபை மீட்டார். தமிழால் சிவபெருமானைப் பாடும் பதிகங்கள் இயற்றினார். இவர் வழியில் திருநாவுக்கரசர் மேலும் உறைத்தெழுந்தார்.

### உண்மை அன்பே வழிபாடு

கிரியைகள் மட்டும் வழிபாடு ஆகிவிடாது, உண்மை அன்பே வழிபாடு என்றார். ‘ நெக்கு நெக்கு நினை பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்’ (5.90.9) என்றார். ‘சாத்திரங்கள் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்’ (5.60.3)என்று சமூக நீதியுரைத்த திருநாவுக்கரசர் ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ (6.98.1)என்று முடியரசை எதிர்த்த முதல் குடியரசர் ஆனார்.

‘அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே
(6.95.10)

என்று சாதிமை கடந்த பத்திமையை அப்பர் முன்னைலைப்படுத்தினார்.

இவர்கள் வழியில் வந்த சுந்தரர் இல்லறத்தினின்றும் இறைவன் திருவடியைச் சென்றடைய முடியும் என்று வாழ்ந்து காட்டினார்.

‘சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை&’ (8.கண்டபத்து 5)

என்று சாதி, குலம், பிறப்பால் மக்களை உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனக் கூறுவதை இழிந்த பண்பு எனச் சாடினார் மாணிக்கவாசகர்.

இவ்வாறு நால்வர் பெருமக்களும் ஏனைய சைவச் சான்றோரும் ஆரிய வருணாச்சிரமத்தைக் கண்டிக்கும் போராட்டத்தின் மறுதலையாகச் சைவம் குறிக்கும் ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ (10.2072) என்ற மனித குல ஒருமைப்பாட்டை வலியுறுத்தினர்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# மீன்பாடு குறைவினால் முல்லை மீனவர் அவதி

## வாழ்வாதாரம் பாதிப்பு நிலையில்

முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்தொழிலாளர்களுக்குக் கடந்த ஒரு மாத காலமாகக் கடலில் மீன்பாடு குறைவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கடல் தொழில் செய்யும் கடற்தொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த ஆண்டின் இறுதியின் டிசெம்பர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப் பகுதிகளில் இரண்டு தடவைகள் பெரும் மழை பெய்துள்ளது. இதனால் பல நாள்கள் கடற்தொழிலுக்குப் போகமுடியாத நிலை. அதனை தொடர்ந்து கடல் சீற்றம் மற்றும் சீற்றம் கடல் நிலை காரணமாக கடற்தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைக்கு செல்லவில்லை.

இந்நிலையில் தற்போது காற்றின் வேகம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இதனால் கடற்தொழில் நடவடிக்கைக்குச் சென்றும் மீன்பாடு இல்லாத காரணத்தினால் கரையோர மீனவ குடும்பங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றனர்.

20 லீற்றர் மண் எண்ணெய் அடித்து ஆழ்கடலுக்கு தொழிலுக்குச் சென்றாலும் எரிபொருள் செலவுக்கு ஏற்ற மீன்படுவதில்லை என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கரையோர கடற்றொழிலை நம்பி வாழும் குடும்பங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். (ஐ)

# உழவு இயந்திரம் மோதி கிரானில் விவசாயி பலி!

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு – கிரான் – கோராவெளி பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை 4.00 மணியளவில் உழவு இயந்திரம் மோதியதில், 67 வயதுடைய விவசாயி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனையடுத்து உழவு இயந்திரம் மற்றும் சாரதி தலைமறைவாகியிருந்த நிலையில், அந்தப்பிரதேச மக்கள் ஒன்று திரண்டு குற்றவாளியைக் கைது செய்யும் வரை சடலத்தை அகற்றவிடாமல் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது. அதிலிருந்து சற்று நேரத்தில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிளில் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தவரை மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் மோதிச் சென்றுள்ளதால் தலைப்பகுதி முழுமையாகச் சிதைவடைந்து இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிரான் – விஷ்ணு கோயில் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முத்துவேல் யோகநாதன் என்பவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. வாழைச்சேனைப் பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மிருசுவிலில் ஆண் கொலை; பெண் ஒருவர் கைதாகினார்

யாழ்ப்பாணம், ஜன. 24

கொடிகாமம் மிருசுவிலில் ஆண் ஒருவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் தன்னை வன்புணர்வதற்கு வந்தார் எனவும் தன்னைப் பாதுகாக்கப்பதற்காக அவரை தாக்கினார் எனவும் அந்தப் பெண் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மிருசுவில் படித்தமகளிர் திட்டம் பகுதியில் கோவில்களில் தொண்டு செய்து கொண்டு தனிமையில் வசித்து வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

ரத்தினம் குகேந்திரன் (வயது 56) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதற்கான காயங்கள் அவரது சடலத்தில் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மோப்ப நாயின் உதவியுடன் எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள வீடொன்றைக் கண்டறிந்தனர். அந்த வீட்டில் வசித்த பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

செவ்வாய்க்கிழமை இரவு வீட்டுக்கு வந்த அவர் என்னை வன்புணர்வதற்கு முயற்சித்தார். அதனால் என்னைப் பாதுகாக்கப்பதற்காக அவரை இரும்புக் கம்பிகளால் தாக்கினேன். அவர் உயிரிழந்துவிட்டார். அதன்பின்னர் அவரது சடலத்தை எடுத்துச் சென்று வீதியில் போட்டடேன் என்று அந்தப் பெண் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபரைத் தாக்கிய கம்பியைத் தண்ணீரால் கழுவி வைத்ததுடன், வீட்டையும் கழுவிச் சந்தேகநபர் சுத்தப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி நீதிவான் விசாரணைகளை முன்னெடுத்தார். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சுமந்திரனின் கருத்துக்கு உருத்திரகுமாரன் பதில்

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் ஒன்றாக வாழ விரும்புகின்றார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் கருத்துக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் பதிலுரைத்துள்ளார்.

இது தொடர்பில் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிலுரைக்கையில் –

எம்.ஏ. சுமந்திரன் கூறிய கூற்று உண்மைக்குப் புறம்பானது. அது அவருக்கே நன்கு தெரியும்.

1977ஆம் ஆண்டு நடந்த தேர்தல் என்பது ஆறாம் திருத்தச்சட்டம் வருவதற்கு முன்னராக நடந்த ஒரு தேர்தல். அதாவது முழுமையான ஓர் அரசியல் வெளியில் நடந்த தேர்தல் அது. அதற்குப் பின்னராக வந்த தேர்தல்கள் எல்லாம் ஆறாம் திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்ட ஓர் மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் வெளியில் நடந்த தேர்தல்கள். இவற்றினை அடிப்படையாக கொண்டு 1977ஆம் ஆண்டு தமிழ் மக்களின் ஆணையினை, அவர்களது அரசியல் பெருவிருப்பை மாற்றமுடியாது.

எம்.ஏ.சுமந்திரன் தனது கூற்றை உண்மையாக நம்பினால், இலங்கையின் அரசமைப்பில் உள்ள ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கச் சொல்லிவிட்டு, தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கான வழிமுறையாகப் பொது வாக்கெடுப்புக்கை நோக்கி உழைக்கவேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு ஈடு செய் நீதியாகவும், தற்போது நடைபெற்ற வரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஒரே வழி சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழம்தான்.

தமிழர் தாயகத்தில் உள்ள தமிழ்மக்கள் தமது அரசியல் பெருவிருப்பான தமிழீழத்தை வெளிப்படையாகக் கூறாமல் இருப்பதற்கான காரணங்களாக, 2009 க்கு முன்னர் இருந்த பலம் தற்போ இல்லை என்பது மட்டுமல்ல, இலங்கையின் ஆறாவது திருத்தச் சட்டமுமே ஆகும்.

இலங்கையின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கிவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பொதுவாக்கெடுப்புக்கு எம்.ஏ.சுமந்திரன் உழைக்க வேண்டும் – என்றார். (ஐ)

# சைவ சமயத்தையும்...

(09 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் சமயங்கள்

ஆரிய மாயை என்று கூறி வைதீகம் கலந்த தமிழர் சமயங்களைப் புறக்கணிக்கும் தமிழ்ச் சிந்தனையாளர் ஆரியமும் வைதீகமும் நீங்கிய தமிழர் சமயங்களை அடையாளம் கண்டு மீட்டெடுக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். இவற்றுள்ளும் சைவம் தமிழர் வளப்படுத்திய தத்துவக் களஞ்சியம் என்பதை உணர்ந்து அதனைப் போற்றிக் கைக்கொள்ள வேண்டும்.

'தமிழருக்குச் சமயமே இல்லை' என்ற முரட்டு வாதம் தமிழரின் சமயம் இருந்த இடத்தில் அந்நிய மதங்களுக்கு ஆட்சி பீடங்களை அமைத்திருக்கிறது. தமிழர் சமயங்களைச் சார்ந்தோரைப் பார்த்து 'கடவுள் இல்லை, இல்லவே இல்லை' என்போர் அந்நிய மதங்களைச் சார்ந்துவிட்ட தமிழரையும் தமிழரை மதம் மாற்றும் அந்நியரையும் பார்த்து அப்படிச் சொல்வதில்லை என்பதால் கடவுள் மறுப்பாளர் வந்தாரை வாழ வைப்பதை மறைமுகப் பணியாகச் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை உணர்த்த வேண்டியுள்ளது.

தமிழரின் மரபு சார்ந்த சமயங்களை வைதீகப் பிடியிலிருந்து மீட்கும் முயற்சியில் தோற்றுப் போனவர்கள் தமிழருக்குச் சமயமே இல்லை என்று மறுதலிப்பது தமிழரின் பண்பாட்டு வரலாற்றை ஊனப்படுத்திவிடும். குறிப்பாகச் சைவ சமயத்தையும் சைவ சித்தாந்தத்தையும் மறுதலிப்பது ஆய கலைகள் அறுபத்து நான்கையும் அறிந்த தமிழனுக்குக் கடவுள் பற்றிய சிந்தனை மட்டும் இல்லை என்று கூறுவதாய் முடியும். இப்பார்வையினின்று மாறி வைதீகப் பிடியிலிருந்து சைவத்தை மீட்க வேண்டும். மீட்டால் சைவம் அறிவார்ந்த சமயமாகச் சமய உலகைத் தலைமை கொள்ளும் என்பது உறுதி.

# மஹிந்தவின் குரல் பதிவை முடிந்தால் வெளியிடுங்கள்!

## ரஞ்சனுக்கு மஹிந்தானந்த சவால்





கொழும்பு, ஜன. 24

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட எமது அரசில் இருக்கும் அமைச்சர் ஒருவரின் குரல் பதிவையாவது ரஞ்சன் ராமநாயக்கவை வெளியிடுமாறு பகிரங்கமாகச் சவால் விடுத்துள்ளார் இராஜாங்க அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே.

பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்–

தம் மீதான சேறுகளைக் கழுவிக்கொள்ளும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க உரையாற்றியுள்ளபோதிலும் அவரின் உண்மை முகம் நாட்டுக்கு ஏற்கனவே அம்பலமாகிவிட்டது.

பிரதமர், அமைச்சர்கள், அமைச்சர்களின் மனைவிகள் மற்றும் மகள்மாரின் குரல் பதிவுகள் தம்மிடமுள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். அந்தக் குரல் பதிவுகள் அனைத்தையும் சபைக்கு ஆற்றுப்படுத்துவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால், இதுவரை எந்தவொரு குரல் பதிவையும் அவர் சபைக்கு ஆற்றுப்படுத்தவில்லை.

முடிந்தால் பிரதமர் மஹிந்த, அமைச்சர்கள், அவர்களது மனைவிமார் மற்றும் மகள்மாரின் குரல் பதிவுகளை வெளியிடுமாறு கோருகின்றோம். மோசடிகள் தொடர்பிலான மற்றும் வழக்குகளுக்காக டீல் போட்டதாகக் கூறப்படும் குரல் பதிவுகளை வெளியிடுமாறு ரஞ்சன் ராமநாயக்கவிடம் பகிரங்கமாக கோருகின்றோம் – என்றார். (ஐ)

# இன்னும் பல சாதனைகளை விராட் கோஹ்லி முறியடிப்பதை பார்க்கத்தான் போகிறோம்!



இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி, இன்னும் பல சாதனைகளை முறியடிப்பதை நாம் பார்க்கத் தான் போகிறோம் என ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்–

விராட் கோஹ்லி அற்புதமான துடுப்பாட்ட வீரர். அவருடைய ஓட்டங்களே அவருடைய திறமையை வெளிப்படுத்துகின்றன. மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் அபாரமாக விளையாடி வருகிறார்.

இன்னும் பல சாதனைகளை அவர் முறியடிப்பதை நாம் பார்க்கத்தான் போகிறோம். ஏற்கெனவே பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். வரும் வருடங்களில் இன்னும் பல சாதனைகளை நிகழ்த்துவார்.

அதிக ஓட்டங்கள் எடுக்கும் வேட்கை அவரிடம் உள்ளது. ஆனால் ஆஸ்திரேலிய அணியிடம் மட்டும் அவர் ஓட்டங்கள் எடுக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

தவிரவும் இந்திய டெஸ்ட் அணியை உலகின் முதல்நிலை அணியாக மாற்றியுள்ளார். உடற்தகுதி முதற்கொண்டு அனைத்திலும் ஒரு தரத்தை அவர் பின்பற்றுகிறார். அணியை மிக அருமையாக வழி நடத்துகிறார்' எனக் கூறியுள்ளார்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்தியா அணி, அண்மையில் சொந்த மண்ணில் நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 – 1 என்ற கணக்கில் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா அணி தற்போது மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், ஐந்து போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாட நியூஸிலாந்து சென்றுள்ளது.

# இலங்கை அணி வெளியேற்றம்!

இளையோருக்கான உலகக்கிண்ண கிரிக் கெட் தொடரிலிருந்து இலங்கை கிரிக்கெட் அணி வெளியேறியுள்ளது.

இதில்குழுஏபிரிவில்இடம்பெற்றுள்ள இலங்கை அணி, தான் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரிலி ருந்து வெளியேறியுள்ளது.

இலங்கை அணி தனது முதல் லீக் போட்டி யில் இந்தியா அணியை எதிர் கொண்டது. இதில் இலங்கை அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில், நியூஸிலாந்து அணியை எதிர் கொண்டது. இப்போட்டியில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளில் இலங்கை அணி தோல்வியடைந்ததால், காலிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்து தொடரிலிருந்து வெளியேறியது.

இலங்கை அணி நாளை நடைபெறும் போட்டியில், ஆறுதல் வெற்றிக்காக ஜப்பான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

16 அணிகள் பங்கேற்றுள்ள 13ஆவது இளையோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஏ.பி.சி.டி. என நான்கு குழுக்கள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறுகின்றன. ஒரு குழுவில் நான்கு அணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த குழுவில் முதல் இரு இடங்களை பிடிக் கும் அணிகள், காலிறுதிக்கு தகுதி பெறும்.



# ஷேவாக்கின் தலை முடியை விட என்னிடம் அதிகம் பணம் உண்டு

வீரேந்திர ஷேவாக்கின் தலையில் இருக்கும் முடிகளின் எண்ணிக்கையை விட தன்னிடம் அதிக பணம் இருப்பதாக, பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் கிண்டலாக கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் வீரேந்திர ஷேவாக் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பேசிய வீடியோவில், சொஹைப் அக்தருக்கு பணம் தேவைப்படுவதால் இந்தியாவைப் புகழ்ந்து பேசுகிறார், எனக் கூறியிருந்தார்.

இந்த வீடியோ வைரலாக பரவிய நிலையில், தற்போது இது குறித்து அக்தர் கிண்டலாக பதிலளித்துள்ளார். அவர் வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது, எனது நண்பர் ஷேவாக் பேசிய வீடியோ வைரலாகிவிட்டது.

அக்தருக்கு பணம் தேவை என்பதால் இந்தியாவை புகழ்கிறார் என அவர் பேசியுள்ளார்.

ஒருவரின் செல்வம் அல்லாவால்தான் கிடைக்கிறது, இந்தியாவால் அல்ல. ஷேவாக்கின் தலைமுடியின் எண்ணிக்கையை விட என்னிடம் அதிக பணம் இருக்கிறது.

நான் இதை வேடிக்கையாகத் தான் சொல்கிறேன், நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளுங்கள் எனக் கூறியுள்ளார்.



# பாகிஸ்தான் ரசிகர்களை குரூரமான விலங்குகள் எனத் திட்டியது ஏன்?



பாகிஸ்தான் ரசிகர்களை விலங்குகள் என திட்டியமையால் சர்ச்சையில் சிக்கிய முன்னாள் தென்னாப்பிரிக்க வீரர் ஹெர்ல் கிப்ஸ் அது குறித்து மனம் திறந்துள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவின் செஞ்சுரியனில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் போது பாகிஸ்தான் ரசிகர்களை கிப்ஸ் குரூரமான விலங்குகள் என்று தரக்குறைவாக பேசியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து அவருக்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஐ.சி.சி. தடை விதித்திருந்தது.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து டிவிட்டரில் தற்போது ரசிகர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஹெர்ல் கிப்ஸ், தன்னுடைய மனைவி மற்றும் மகனை இருக்கையில் இருந்து ரவுடித்தனமாக பாகிஸ்தான் ரசிகர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றியமையால் தான் கோபமடைந்து அந்த வார்த்தைகளைப் பிரயோகித்தார் எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில், கிப்சின் இந்த பதிவிற்கு அவருடைய ஆதரவாளர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்கள் தங்களது ஆதரவுக் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.

# வவுனியாவில் விபத்து!





வவுனியா, ஜன. 24

வவுனியா ஏ9 வீதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் மாட்டுடன் மோதுண்டு லொறி விபத்துக்குள்ளானது.

ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பொருள்களை ஏற்றிச் சென்ற லொறி வவுனியா ஏ - 9 வீதியில் சோயா வீதிக்கு அருகே மாட்டுடன் மோதுண்டு வீதியின் மறுபக்கம் சென்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் லொறியின் சாரதிச் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார். மாடு உயிரிழந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# என் மீது குற்றமிருப்பின் விசாரணை நடத்துங்கள்

கொழும்பு, ஜன. 24

அபத்தமான குற்றச்சாட்டுக்களை ஏற்க நான் தயாரில்லை. சந்தேகம் இருந்தால் முழு அளவில் விசாரணை நடத்துங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க நான் தயார்.

– இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம்.

நேற்று நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை ஆற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரானின் சகோதரர் ரில்வானைக் கொழும்பு வைத்தியசாலையில் நான் பார்க்க சென்றறேன் என வந்த செய்திகள் தவறானவை. இதனால் எனக்கு இப்போது அச்சுறுத்தலான நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சிகளால் இப்படியான செய்திகள் வெளியிடப்படுகின்றன. அரசியல் ரீதியான காரணங்களுக்காக இப்படியான கதைகளைச் சோடித்து மக்களை ஏமாற்றும் முயற்சி இது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தொடர்புபடுத்தி இப்படியான செய்திகள் வெளிவந்தன. நான் எதனையும் இரகசியமாக செய்தவனல்லன். காத்தான்குடிக்கு நான் சென்றபோதும் முன்னர் இப்படியான செய்திகள் வெளிவந்தன. தீவிரவாதி என்று தெரியாமல் நான் சந்தித்தவர்களை வைத்து இப்படியான செய்திகள் வருகின்றன. செய்யாத குற்றத்திற்கு நான் குற்றவாளியாகத் தயாரில்லை. உயிர்த்து ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தியவர்கள் எமது மதத்தின் கொள்கை, கோட்பாடுகளை ஏற்றவர்கள் அல்லர். அதனை எமது மதமோ சமூகமோ அங்கீகரிக்கவும் மாட்டாது. இப்படியான நிலையில் அபத்தமான குற்றச்சாட்டுக்களை ஏற்க நான் தயாரில்லை. சந்தேகம் இருந்தால் முழு அளவில் விசாரணை நடத்துங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க நான் தயார். அதேசமயம் அரசியல் காரணங்களுக்காக யாரின் நற்பெயரையும் கெடுக்காதீர்கள் – என்றார். (ஐ)



சபையில் கேட்டார் ரவூப் ஹக்கீம்

# சாளம்பைக்குளம் குப்பைமேடு விவகாரம்: இரண்டாம் நாளாகவும் மக்கள் போராட்டம்

வவுனியா, ஜன. 24

வவுனியா – மன்னார் வீதி புதிய சாளம்பைக்குளம் கிராமத்திற்கு அருகில் பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள, குப்பை மேட்டை அகற்றுமாறு கோரி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்படி, நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் பிரதேச மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் 2ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு தங்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தரும் வரை இந்த இடத்திலிருந்து விலகிச் செல்லமாட்டோம் எனப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



இதனால் வவுனியா நகர சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் வாகனங்கள் நேற்று நகரில் குப்பைகளை அகற்றாமல் இருந்தன. நேற்று முன்தினம் அகற்றப்பட்ட குப்பைகள், குப்பை ஏற்றும் வாகனங்களில் ஏற்றப்பட்ட நிலையில் நகர சபையில் தரித்துள்ளன.

நேற்று நகர சபையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரிய மின் நிலையம் கிளிநொச்சியில்

இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையம் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேற்கு நோர்வே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து இதனை உருவாக்கின. இன்று கிளிநொச்சியில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்தத் திட்டத்தின் மூலம் 12 மெகாவோட் மின்சாரம் பெறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆராய்ச்சி மற்றும் தகவல் பகிர்வு திட்டமாக இந்தத் திட்டம் பயன்படுத்தப்படும். இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகத்துக்கு பயன்படுத்தப்படும்.

கடந்த ஆண்டு மே மாதத்திலிருந்து இரு பல்கலைக்கழகங்களும் இந்தத் திட்டத்தில் செயல்பட்டுவருகின்றன எனவும், உலக தூய்மையான எரிசக்தித் துறையில் முக்கிய இடத்தை வகிக்கும் நோர்வே, அறிவைப் பகிர்ந்து கொள்வதிலும், தூய்மையான எரிசக்தி ஆராய்ச்சி திட்டங்களை உருவாக்க இலங்கைக்கு உதவுவதிலும் ஆர்வமாக உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# புலிகளின் தங்கத்தை தேடி முல்லைத்தீவில் அகழ்வு



முல்லைத்தீவு, ஜன. 24

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதியில் பொலிஸாரால் அகழ்வு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. எனினும் இதன்போது எந்தப் பொருள்களும் மீட்கப்படவில்லை.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குப் பின்புறமாக இந்த அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இறுதி யுத்தத்தின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டன எனச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தைத் தேடியே இவ்வாறு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து இந்த அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

மிக நீண்ட நேரமாக அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோதிலும் எந்தப் பொருள்களும் மீட்கப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## கடத்தல் தங்கத்துடன் மூவர் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஜன. 24

சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை இலங்கையிலிருந்து கடத்த முயன்ற மூன்று சந்தேக நபர்களை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர்.

16 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டவர்களில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடைமையாக்கப்படவுள்ளது. (ஐ)

## மரங்கள் வெட்டி விற்றவருக்கு நீதிவான் கொடுத்த தண்டனை

முல்லைத்தீவு, ஜன. 24

சட்டவிரோதமாக மரம் வெட்டி கடத்தி மற்றும் அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவித்த நபருக்கு அபராதத்துடன் 100 மரக்கன்றுகள் நடுமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்றது. வழக்கை விசாரித்த முல்லைத்தீவு நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்டவிரோத மரக் கடத்தல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நீதிமன்றில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மரக்கடத்தல் வழக்கொன்றை நேற்று முன்தினம் விசாரணை மேற்கொண்ட நீதிவான் குற்றவாளியென சந்தேகத்தின் பேரில் கைதானவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

வெட்டப்பட்ட மரம் மற்றும் சேதமாக்கப்பட்ட அரச சொத்துக்களுக்காக ரூபா ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும், வன வளப் பாதுகாப்புப் பிரிவின் அறிவுறுத்தலிற்கமைவாக 100 மரக்கன்றுளை நாட்டுமாறும் இதன்போது நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஐ)

## சிவனொளிபாதமலைப் பகுதியில் இராணுவத்தினர் சிரமதான பணி



கொழும்பு, ஜன. 24

பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத் தளபதியின் வேண்டுக்கோளுக்கிணங்க சிவனொளிபாதமலைப் பகுதியில் பதுளை மற்றும் கண்டி பகுதிக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசாத் எதிரிசிங்க தலைமையில் 200ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சிரமதானப் பணியில் நேற்று ஈடுபட்டனர்.

பொலித்தின், வெற்று பிளாஸ்ரிக் போத்தல்கள் மற்றும் சுகாதாரத்துக்குச் சீர்கேடான குப்பைகளை அகற்றும் பணி இடம் பெற்றது.



இதன்போது, மத்திய மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லக்சிரி வடுகேயும் கலந்துகொண்டார்.

சேகரிக்கப்பட்ட குப்பைகள், பொலித்தீன், வெற்று பிளாஸ்ரிக் போத்தல்கள் அனைத்தையும் மஸ்கெலியா பிரதேச சபையிடம் ஒப்படைத்தனர். (ஐ)



# ஓமந்தையில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே?

## சபையில் சாள்ஸ் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜன. 24

ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அப்போது பாதுகாப்பு செயலாளராக பதவிவகித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தவேண்டும்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தினார்.

எப்படியான பொருளாதார திட்டங்கள் வகுக்கப்பட்டாலும், யார் ஜனாதிபதியானாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும்வரை இந்த நாடு முன்னேற்றமடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் இறந்துவிட்டனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டிருந்தது.

போரின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அப்பால், ஓமந்தைச் சாவடியில் வைத்துப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஏதேனும் விதத்தில் உதவியவர்கள் சரணடையுமாறு ஓமந்தைச் சாவடியில் வைத்து ஒலிபெருக்கு மூலம் படையினர் அறிவித்தனர். இதன்படி இடம்பெயர்ந்து வந்தவர்களுள் பலர் சரணடைந்தனர்.



பெற்றோர் பிள்ளைகளை ஒப்படைத்தனர். இவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் எங்கேஎன்றுதான்அவர்களின்உறவினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டனர் என்பது வேறு விடயம். ஓமந்தை சோதனைச்சாவடியில் நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே? அவர்களை என்ன செய்தீர்கள்?

இறுதிப்போரின்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதிக்கு மட்டுமே இது நன்றாகத் தெரியும். இராணுவத்தின் மாவட்ட தளபதிகள், புலனாய்வாளர்களுடன் அவரே தொடர்பை வைத்திருந்தார்.


அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக தமிழர்களை நசுக்கிச் சிங்கள மக்களின் வாக்குகளை பெற முயற்சிக்கின்றனர்.

இந்நிலைமை மாறவேண்டும். ஜனநாயக வழியிலேயே அனைத்தும் இடம்பெறவேண்டும்.

சிங்கள மக்களை ஆள்வதற்கோ அல்லது பௌத்த மதத்தை கட்டுப்படுத்துவதற்கோ நாம் அதிகாரங்களைக் கோரவில்லை. எங்கள் மண்ணில் எங்களை நாங்களே ஆளும் நிலை உருவாக வேண்டும் என்றே கேட்கின்றோம்.

எனவே, எப்படியான பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட்டாலும், யார் ஜனாதிபதியானாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இந்த நாட்டை முன்னேற்றமுடியாது – என்றார். (ஐ)

## மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையோருக்கு எதிராக நடவடிக்கை



Karu Jayasuriya
@KaruOnline

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்காய்வு அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முறைகேடுகள் யாரால் செய்யப்பட்டிருப்பினும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. சேறு பூசும் அரசியலின் மூலம் அது முடக்கப்படாமல் பாதுகாப்பதே முக்கியமானது.

கொழும்பு, ஜன. 24

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர்கள் யாராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் பக்கத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்காய்வு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முறைகேடுகள் யாரால் செய்யப்பட்டிருப்பினும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. சேறு பூசும் அரசியலின் மூலம் அது முடக்கப்படாமல் பாதுகாப்பதே முக்கியமானது' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு பணிப்பாளர் நாயகம் நியமனம்

கொழும்பு, ஜன. 24

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் நாயகமாக அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கனிஷ்க விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்தநிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அம்பாறை மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கனிஷ்க விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## லொறியுடன் மோதிய சிறைச்சாலை பஸ்!

கொழும்பு, ஜன. 24

குருணாகல் – அம்பன்பொல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைக் கைதிகளை ஏற்றிச் சென்ற சிறைச்சாலை பஸ் ஒன்று லொறியுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் 3 சிறைச்சாலை அதிகாரிகளும் 9 சந்தேகநபர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வில்பத்து காடழிப்பு வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 24

பாதுகாக்கப்பட்ட வில்பத்து வனத்தை அழித்து சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மஹிந்த சமயவர்தன முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படுகின்றன என நீதிமன்றம் அறிவித்தது.

பாதுகாக்கப்பட்ட வில்பத்து வனத்தை அழித்து சட்டவிரோத கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் சூழலுக்கு பாரியளவு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறி சுற்றுச்சூழல் நீதி மையத்தால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது முற்றாக சட்டத்திற்கு முரணானது என்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கட்டடங்களை அகற்ற உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் நீதிமன்றத்திடம் அந்த மனுவில் கேட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2020இல் வெளியிடப்பெற்றது.